உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—சங.] பார்த்திப-ஸூ மாசி-பங்குனிமீ [பகுதி. ச-ரு.

Vol. 43. February—April 1946. No. 4-5.

## திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம்

—:❁:—

திருவாளர் ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.

உச-ஆம்பக்கத்தொடர்ச்சி.

அருந்தளவ மூரலிட வம்புயம்பா சடைவிரிப்பக்
கரும்புதீம் பால்வார்ப்பக் கதலிநறு நெய்வார்ப்பச்
சுரும்பினங்கள் விருந்தூட்டுஞ் சொலவரிதா மந்நாட்டில்
விருந்துபுறந் தருவாரே வியப்பாரைந் தருவாரே.

"தளவம்-முல்லை. மூரல் இட (அரும்பாகிய) சோற்றை யிட. பாசடை-பசிய இலை. பால் - கருப்பஞ்சாறு. கதலி நறு நெய் வார்ப்ப - வாழைப்பழங்கள் நல்ல நெய் (போன்ற தேன்) ஒழுக்க. புறந்தருவாரே - காப்பவர்களே. வியப்பு - மகிழ்ச்சி. ஆர் - நிறைந்த. ஐந்தருவார் - பஞ்சதருநிழலிலிருப்பவர் (ஆவர்). ஏ - அசை." (திருக்குற்றாலத்தலபுராண அரும்பதவுரை.)

(ஆரியநாடு, தன்பால்வளரும்) தாமரை இலைபரப்ப, முல்லை அரும்புகளாகிய சோறுபடைக்க, கரும்பு (அந்தச் சோற்றில் பால் வார்ப்பதுபோலக்) கருப்பஞ்சாற்றை வார்க்க, வாழை(பழம் வெடித் தொழுகும் தேனாகிய) நெய்யைப் பெய்ய, வண்டுக்கூட்டத்துக்கு

விருந்தூட்டும் சொல்லுதற்கரிய (வளம்படைத்த) அந்த (ஆரிய) நாட்டிலே விருந்தோம்பும் மக்களே தேவ்ராவரென்பது கருத்து.

தேவர் யாவர்? எங்கிருந்து தேவலோகத்துக்கு வந்தார்கள்? என்று திகைக்கவேண்டியதில்லை. அவர்கள், ஆதித்தியதரும பலனாக (-விருந்தோம்பும் அறப்பயனாக)த் தேவப்பிறவியடைந்த ஆரியநாட்டுமக்களேயென்பது குறிப்பு. (17)

ஆட லாயிரம் விழியினா னருஞ்சிறை யரிந்திடப் புகுநாளில்
ஓட வேறிட மின்மையா லெம்பிரா னுறைதரு மிந்நாட்டின்
மாட மாளிகை மண்டப முபரிகை மன்ற நாடகசாலை
கூட கோபுர மெனக்குடி புகுந்தன குலவரைக் குலமெல்லாம்.

ஆடல் - வெற்றி. ஆயிரம்விழியினான் - ஆயிரங்கண்களுடைய இந்திரன். மாடம் - ஆலயம். மாளிகை - அரசரில். உபரிகை - மேல்மாடம். மன்றம் - சபாமண்டபம். குலவரைக்குலம் - உயர்வான மலைக்கூட்டம்.

(மலைகளெல்லாம் சிறகுகளையுடையனவாயிருந்த பண்டைக் காலத்தில்) இந்திரன் மலைகளின் சிறகுகளை அரியப்புகுந்தபோது மலைக்கூட்டங்களெல்லாம் ஓடி(ச் சேமமாயிருத்தற்கு) வேறிடமில்லாமையால் சிவபெருமான்வாழும் ஆரியநாட்டிலே மாடங்கள் மாளிகைகள் கூடங்கள் கோபுரங்கள் மண்டபங்கள் மன்றங்கள் நாடகசாலைகளாக (உருமாறி)க் குடிபுகுந்தன (என்னும்படி ஆரியநாட்டு மாடமாளிகைகள் முதலியவைகள் விசாலமும் உன்னதமும் உடையனவாயுள்ளன) என்பது கருத்து. (18)

செங்கெ லாரமே சிற்றிலாச் செழுஞ்சிலைக் கமடங்க ளடுப்பாகக்
கன்னன் மாமணி யரிசிதூய் வலம்புரிக் கடங்கள்பெய் தலையேற்றிச்
சொன்ன மாமணா லுமித்திரள் சொரிந்துசெந் துவர்கன லெனமூட்டி
யன்ன மார்வயற் பாவையர் பாவைகட் கருத்துவர் சிறுசோறு.

ஆரம் - முத்து. செந்நெற்பயிர் நெற்கதிர்களேயன்றி முத்துக்களையும் ஈனுமென்னும் கவிமரபுபற்றிச் செந்நெல் ஆரம் எனப்பட்டது. சிற்றில் - சிறுவீடு. சினைக் கமடம் - சூல்கொண்ட ஆமை. கன்னல் மா மணி - (கவிமரபுப்படி) கரும்பில்விளையும் பெரிய முத்து. தூய் - தூவி. வலம்புரிக் கடம் - வலம்புரிச் சங்காகிய குடம். கள் - தேன். பெய்து - ஊற்றி. சொன்னமாம் மணல் - தங்கமணல். துவர் - பவளம். கனல் - நெருப்பு. வயற் பாவையர் - மருதநிலத்துப் பெண்கள். பாவைகட்கு - மரப்பாவைகளுக்கு. அருத்துவர் - ஊட்டுவர்.

மருதநிலப்பெண்கள், நெற்பயிரில், (நெற்களோடு) விளைந்த முத்து(க் குவையா லாக்கப்பட்ட சுவர்களையுடைய) சிறுவீடாக, ஆமை அடுப்பாக, தங்கமணலை (மேற்கூறிய அடுப்பில்) உமியாகச் சொரிந்து, பவளத்தை நெருப்பாக மூட்டி, வலம்புரிச்சங்கமாகிய குடத்தை உலை(ப்பானையாக மேற்கூறிய அடுப்பின்மேல்) ஏற்றித் தேன் (ஆகிய நீரைப்) பெய்து கரும்புமுத்துக்களாகிய அரிசியைத் தூவிச் (சமைத்த) சிறுசோற்றை(த் தங்கள் குழந்தைகளாகப் பாவித்த மர)ப் பாவைகளுக்கு ஊட்டு(ம் விளையாடல்செய்) வார்களென்பது கருத்து. (19)

காவிகள் கிளைக்கு மாலை கமழ்குழற் கிளைக்கு மாலை
எவுநீர்ப் பழநந் தோட்ட மிடந்தொறும் பழனந் தோட்ட
மாவிவாய்க் கமட மேயு மறங்கள்வாய்க் கமட மேயுந்
தூவிய மடப்பா லன்னந் துறைதொறு மடப்பா லன்னம்.

காவி - குவளைமலர் - நீலோற்பலமலர். கிளைக்கும் - கப்புவிடும்; இங்கே குவிந்து சேர்ந்து ஒன்றுயிருந்த இதழ்கள் பிரிதலாகிய மலர்தல்செய்யுமென்ற தாற்பரியப் பொருள்படநின்றது. மாலை குழற்கு இளைக்கும் - இருள் கூந்தலுக்குத் தோற்கும். எவுநீர்ப் பழநந்து ஓட்டம் - (வயலிற் பாயும்படி வாய்க்கால்வழியாகச்) செலுத்தப்பட்ட தண்ணீரில் பழமையான சங்கு ஓடுதல் (உள்ளது). இடம் தொறும் பழனம் தோட்டம் - எல்லா இடங்களிலும் (- நிலப்பகுதிகளிலும்) வயல்களும் தோட்டங்களும் (உள்ளன). ஆவி வாய்க் கமடம் மேயும் - தடாகங்களினிடத்தே ஆமைகள் சஞ்சரிக்கும்.

அறங்கள் வாய்க்க மடம் ஏயும் - அறச்சாலைகளாக வாய்க்கும்படி மடங்கள் பொருந்தியிருக்கும். மேயும் - சஞ்சரிக்கும் (தமிழகராதி). அறம் - அறச்சாலை Feeding-House (தமிழகராதி). மடம் - நைஷ்டிகப்பிரமசாரிகளும் சந்நியாசிகளுமான ஆசாரியர் வாழும் இடம்-சிருங்கேரிமடம், திருவாவடுதுறைமடம் (தமிழகராதி). தூவிய மடப்பால் அன்னம் துறைதொறும் - சிறகுகளையுடைய அழகுள்ள வெள்ளையன்னங்கள் நீர்த்துறைகள்தோறும் (உள்ளன). மடப்பால் அன்னம் - சத்திரங்களில் சோறு (உள்ளது). மடம். சத்திரம் (தமிழகராதி). (20)

செய்காட்டுந் தாமரையாத் தேன்காட்டுங் கழுநீரா
மொய்காட்டு நறுந்தளவா முருகாட்டு மாந்தளிராக்
கைகாட்டி முகங்காட்டிக் கண்காட்டி நகைகாட்டி
மெய்காட்டித் திருமடந்தை விளையாடுந் திருநாடு.

செய் - வயல். கழுநீர் - நீலோற்பலம். மொய் - கூட்டம். நறுந்தளவு - வாசனையுள்ள முல்லையரும்பு. "முருகு - வாசனை. முருகு என்பது முரு என விகாரமாயிற்று". (திருக்குற்றாலத்தலபுராணம் அரும்பதவுரை).

திருமகள், தன் முகம் கைகளைத் தாமரைப்பூக்களாகவும் கண்ணை நீலோற்பலமலராகவும் பல்லை முல்லையரும்பாகவும் திருமேனியை மாந்தளிராகவும் தோன்றச்செய்து திருவிளையாடல் செய்கின்ற திருநாடு (ஆரியநாடு) என்பது கருத்து. (21)

[தொடரும்]

# ஒரு துறைக்கோவையாராய்ச்சி

[சு-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

"வணங்காத தெவ்வைப் பொருமால் சொரிமுத்து வன்னியன்பொன்
னணங்காரு மார்பன் ரகுநாயகன்"

என்பது இக்கோவையின் 90-ஆம் செய்யுளிற் பாட்டுடைத்தலைவன் பெருமைகூறும் முற்பகுதியாகும். இதனுள்,

"வணங்காத தெவ்வைப் பொருமால் சொரிமுத்து வன்னியன்"

என்பதனை ஒரே தொடராகக்கொண்டு அதற்கு உரைப்பதிப்பில்,

"வணங்காத தெவ்வை - பணியாத பகைவரை, பொரும்-
போர்செய்தழிக்கவல்ல, மால்சொரி முத்துவன்னியன்-
மேகஞ்சொரிந்த முத்துவன்னியன்"

என்று பொருள் விரிக்கப்பட்டுளது.

இங்கு 'மால்சொரிமுத்துவன்னியன்' என்று கொண்டு, 'மேகஞ் சொரிந்த முத்துவன்னியன்' என்று விரித்தபொருள் இயைபுடையதா யில்லை. மேலும், 'பொரும்' என்னும் எச்சம், அடுத்துள்ள 'மால்' என்னும் பெயர்கொண்டுமுடியாது சேணிடையுள்ள வன்னியன் என்பதுகொண்டு முடிதல் தூரான்வயமாகும். அன்றியும், கடலிலேயுள்ள தலைமன்னார் முத்துச்சலாபத்தில்வரும் முத்துக் குவியல்களையுடையானை மேகஞ்சொரிந்த முத்துக்களையுடையான் என்று கூறுதலும் பொருந்துவதாயில்லை.

இதன் அமைதி காண ஆராய்ந்தபொழுது 'சொரிமுத்துவன்னி யன்' என்பது சேதுவேந்தர்களுக்குரியதொரு பட்டப்பெயர் என்று அவ்வேந்தர் முடிசூடும்விழாவில் வெளியிடும் பிரகடனங்களால் வெளியாயிற்று. அதனால் மேற்குறித்த அடிப்பகுதி, 'வணங்காத தெவ்வைப் பொரும் மால், சொரிமுத்துவன்னியன்' என அடை யடுத்தபெயரடுக்காய்ச் சிறந்தபொருளமைதியும் உடையதாயிருத் தல் புலப்பட்டது. இங்கு பொரும் என்னும் எச்சம் சேட்பட்ட வன்னியன் என்னும் பெயர் கொண்டுமுடிந்து தூரான்வயமாகாது அடுத்துள்ள மால் என்னும் பெயர்கொண்டு இனிதுமுடிந்துநிற்ற லும் நோக்கத்தகும். மால் என்பது பெரியோன் அல்லது திருமால் என்று பொருள்படும்.

ஆதலால், மேலே குறித்த அடிப்பகுதியில் வணங்காத தெவ் வைப்பொரும் மால், சொரிமுத்துவன்னியன் என்று பெயரடுக் காகக்கொண்டு பொருள்விரித்துக்கொள்ளுதலே கவிகருத்தொடு பட்டதாகும்.

---

"நெஞ்சத்தின் மாலென் றுணர்ந்திக் குடந்தந்து நீர்மலர்ப்பூங்
கஞ்சத் திளந்திரு வென்றோநற் பாவையைக் கைக்கொண்டதே"

என்பது இக்கோவையின் 124-ஆம் பாடலில்* றுவல்பொருள் (நாணிக்கண்புதைத்தல்) கூறும் பிற்பகுதியாகும்.

இப்பகுதிக்கு உரைப்பதிப்புள்,

"நெஞ்சத்தில்—உன்மனத்தில், மால் என்று உணர்ந்து—என்னைத் திருமாலென்று அறிந்து, இக்குடம்தந்து -இந்தக் குடக்கூத்தைத் எனக்குத் தந்து, நீர், மலர்ப் பூங்கஞ்சத்து - அழகிய தாமரைமலரிலுள்ள, இளந் திரு என்றோ - இளமையாகிய திருமகளென்று - நினைத்தோ, நல் பாவையைக் கைக்கொண்டது அழகிய பிரதிமையைக் கைப்பற்றியது"

என்று பதவுரையுள் வெளிப்படைப்பொருளும்,

"குடக்கூத்து - திருமால்கூத்து, பாவையைக் கைக் கொண்டு விளையாடுவது மாதருக்கு இயல்பாதலால், 'கஞ்சத்திளந்திருவென்றோ நற்பாவையைக் கைக் கொண்டது' என்றார்"

என்று விசேடவுரையுள் அதற்கு விளக்கமும் காட்டப்பட்டுள்ளன.

பாவையைக் கைக்கொண்டு விளையாடுவது பேதைப்பருவத் தினரான இளஞ்சிறுமியரியல்பு. பருவமடைந்த மாதரியல்பன்று. மங்கைப்பருவமடைந்த தலைவியையெதிர்ந்து தலைவன் கூற்று நிகழ்த்தும் இவ்விடத்துப் 'பாவை' யென்பதற்குப் 'பிரதிமை' யென்றுகண்டபொருளும், "பாவையைக் கைக்கொண்டு விளையாடு வது மாதருக்கு இயல்பாதலால், 'நீர் கஞ்சத்திளந்திருவென்றோ நற் பாவையைக் கைக்கொண்டது' என்றார்" என்று காட்டிய விளக்க மும் அமைவுடையவாகா.

---

* இப்பாட்டு ஏடுகளில் முன்பின் இடம் மாறி வெவ்வேறு இலக்கம் உடையதாய்க் காணப்படுகிறது. பின்வரும் பாடல்களும் அன்ன.

தலைமகனைத் திருமாலாகக் கொண்டதற்கேற்பக் 'குடம்' என்பதற்குக் குடக்கூத்தென்று வெளிப்படைப்பொருள் கண்டது போலத் தலைமகளைத் திருமகளாக் கொண்டதற்கிசையப் 'பாவை' யென்பதற்கும் (திருமகளாடலாகிய) பாவைக்கூத்தென்று பொருள் காணுதலே அமைவுடையதாகும்.

இதனால், தலைவனும் தலைவியுமாகிய இருவரையும் முறையே நடனும் நடியுமாகிய ஒத்ததகுதியுடையராக்கிக் காட்டிய கவி சாதுரியமும் இனிதுவிளங்கும்.

பாவையென்பது அசுரர் போர்க்கோலமொழிந்து மோகித்து வீழும்படி இலக்குமி மோகினிவடிவங்கொண்டு ஆடிய ஆடல். இது,

"செருவெங் கோலம் அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்" (60—61)

என்னும் சிலப்பதிகாரக் கடலாடுகாதையடிகளால் அறியப்படும்.

நாணிக்கண்புதைத்தலாகிய நுவல்பொருளில், 'குடம்' என்பது தனத்தினையும் 'பாவை' யென்பது கண்ணினையும் ஆகுபெயராய்நின்று உணர்த்தின.

---

"வரமேந்து வெற்றி யரக்கர்பிரானுயிர் வாட்டவொற்றைச்
சரமேந்து தேவை ரகுநாயகன்றமிழ் வீரைவெற்பில்
உரமேந்து நுங்கள் குலத்தியல்போ வனத்தூடுவரக்
கரமேந்தி நின்ற மடவீர் கலைகள வாகின்றதே"

என்பது உரைப்பதிப்பில் இக்கோவையின் 129-ஆம் பாடலாகக் காணப்படுகிறது.

இச்செய்யுளின் ஈற்றடி சங்கத்துப் பிரதியொன்றில்,

'கரமேந்தி நின்றமடவீர் கலைகள் கவர்கின்றதே'

என்று காணப்படுகிறது.

உரைப்பதிப்பிற் கண்ட 'கலைவளவாகின்றதே' என்ற பாடம், மூன்றாம் அடியில் 'நுங்கள் குலத்தியல்போ' என்பதனுடன் நன் கியைந்துமுடியவில்லை. பிற்குறித்த ஏட்டிற்கண்ட பாடம், 'கலைகள் கவர்கின்றதே நும் குலத்தியல்போ?' என நன்கியைந்துநிற்றலின் அதுவே பொருளமைதியுடைய சுத்தபாடமென்று தோன்றுகிறது.

---

"எண்கட்டு மானபுர் றேன்றுடலர்படை யேங்கவடுந்
திண்கட்டுவாங்குதந்துரை"

என்பது, உரைப்பதிப்புள் இக்கோவையின் 145-ஆம் பாடலிற் பாட்டுடைத்தலைவன்பெருமைபேசும் முற்பகுதியாகக் காணப்படுகிறது.

இப்பகுதிக்கு, அவ்வுரைப்பதிப்பில்,

"எண் கட்டு மானம் – மதித்ததற்குரிய உறுதிப்பாட்டையும் பெருமையையுமுடைய, புல்தோன்று - புலியைப்போலத்தோன்றுகிற, ஆடவர்படை ஏங்க - போர்வீரருடைய படைகள் அஞ்சும்படி, அடும் - கொல்லுகின்ற, திண்கட்டுவாங்கும் - உறுதியாகிய காவலையொழிக்கின்ற, துரை - பிரபு". என்று பதவுரையும், " 'ஆடவர்படை' எனப் பாடமோதி, 'மன்னரதுபடை' என்றுரைப்பினுமாம்" என்று விசேடவுரையும் வரையப்பட்டுள்ளன.

இங்கு, 'அடும்,' 'வாங்கும்' என்ற பெயரெச்சங்கள் 'துரை' என்ற பெயர்கொண்டுமுடிய விரித்த உரையும், 'ஆடவர்படை' யென்றபாடத்துக்கு 'மன்னரதுபடை' யென்று உரைத்தபொருளும், கிடைத்தபாடத்துக்கு ஒருவாறு வலிந்துகொள்ளப்பட்டனவாயிருத்தலின், இந்நூலின் பழைய அச்சுப்பிரதிகளையும் ஏட்டுப்பிரதிகளையும் உற்றுநோக்கியதில், மேலேகுறித்த அடிகளுள், திண்கட்டு வாங்குந்துரை' என்னும் இரண்டாமடி, சங்கத்துள்ள பழைய அச்சுப்புத்தகமிரண்டிலும் ஏட்டுப்பிரதியிரண்டிலும் 'திண்கட்டுவாங்கத் துரை' எனவும், முதலடியுள் 'எண்கட்டுமானபுற்றோன்றுடலர்படையேங்க' என்பது சங்கத்துள்ள ஒரு பழைய ஏட்டில்,

'எண்கட்டு மாள்புற்றேன நாடலர்படையேங்க'

எனவும் பாடம் வேறுபட்டுக் காணப்பட்டன.

இப்பாடங்கொண்டுநோக்குமிடத்து அவ்வடிகளுக்கு, '(மலைபோலச் சலியாதெதிர்த்துநின்ற) பகைவர்படை மதித்தற்குரிய வலியழிந்த புற்றினைப்போல (எளிதே அழிந்து) மெலிய அடுகின்ற வலிய கட்டுவாங்கம் என்னும் ஆயுதவிசேடத்தையுடைய அரசன்' என்று பொருள் இனிதுகொள்ளநிற்றலால்,

'எண்கட்டுமாள்புற்றேனநாடலர்படையேங்கவடுந்
திண்கட்டுவாங்கத்துரை'

என்று பின்கண்டபாடமே அமைவுடையதென்று தோன்றுகிறது.

T. K. இராமாநுஜையங்கார்.
உதவிப்பத்திராசிரியர்,

[தொடரும்]

உ

# பழையாறைநகர்

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்,
ஆசிரியர், அண்ணாமலைபல்கலைக்கழகம்.

கடைச்சங்கநாளில் அரசாண்ட சோழமன்னர்க்குக் கடற்கரை நகரமாகிய காவிரிப்பூம்பட்டினமும் உள்நாட்டுநகரமாகிய உறையூரும் சிறந்த தலைநகர்களாக விளங்கியமைபோலப் பிற்காலச் சோழர்க்குத் தஞ்சைமாநகரும் கங்கைகொண்டசோழபுரமும் பழையாறைநகரும் தலைநகர்களாக நிலவின. அவற்றுள், பழையாறைநகரைப்பற்றியசெய்திகள் இதுகாறும் ஆராய்ந்து விளக்கப்படவில்லை. ஆதலால் இத்தொன்னகரைப்பற்றி ஈண்டு ஆராய்வாம்.

இருக்கும் இடம்:- இது, கும்பகோணத்திற்குத் தென்மேற்கே மூன்றுமைல்தூரத்தில் பழையாறு என்னும் பெயருடன் இந்நாளில் ஒரு சிற்றூராக உளது. இது முற்காலத்தில் ஐந்துமைல் நீளமும் மூன்று மைல் அகலமும் உள்ள ஒரு பெரிய நகரமாயிருந்தது; 'தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து-பாரில் நீடிய பெருமை சேர் பதி பழையாறை' என்று பெரியபுராண ஆசிரியராகிய சேக்கிழாரடிகள் கூறியிருப்பதும் இச்செய்தியை வலியுறுத்துவதாகும்.

தோன்மை:-கி. பி. ஏழாம்நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவிய திருநாவுக்கரசுசுவாமிகள் பழையாறை வடதளியைப் பாடியிருத்தலாலும்* அவர்காலத்திலிருந்த திருஞானசம்பந்தசுவாமிகள் பழையாறையிலுள்ள பட்டீச்சுரத்தைப் பாடியிருத்தலாலும்† இந்நகர் கி. பி. ஏழாம்நூற்றாண்டிலேயே சிறந்துவிளங்கியிருத்தல் வேண்டும் என்பது திண்ணம்.

---

* 'ஆதியைப் பழையாறை வடதளிச், சோதியைத் தொழுவார் துயர் தீருமே'—(அப்பர்சுவாமிகள் பழையாறைவடதளிப்பதிகம். பா. 6).

† 'காலைமடவார்கள்புனலாடுவதுகவ்வைகடியார்மறுகெலாம்
மாலைமணநாறுபழையாறைமழபாடியழகாயமலிசீர்ப்
பாலையனநீறுபுனைமார்பனுறைபட்டிசரமேபரவுவார்'—

(திருஞானசம்பந்தர். பட்டீச்சுரம். பா. 3).

வரலாறு:—திருநாவுக்கரசர் பழையாறைவடதளியை வணங்கச் சென்றபோது, அங்கிருந்த சிவலிங்கத்தைச் சமணர்கள் மறைத்து விட்டனர் என்றும், அதுபற்றி அடிகள் வருந்தினாராக, இந்நகரி லிருந்த அரசன் அதனையறிந்து அடிகள் துன்பத்தைப் போக்கி வடதளிப்பெருமானுக்குச் சிறந்த விமானம் எடுப்பித்து வழிபாட் டிற்கு நிவந்தமும் அளித்தான் என்றும் சேக்கிழாரடிகள் தம் பெரியபுராணத்திற் கூறியுள்ளனர். எனவே, ஏழாம்நூற்றாண்டில் அப்பர்சுவாமிகள்காலத்தில் இந்நகரில் ஓர் அரசன் இருந்தனன் என்று தெரிகிறது. அவன் பல்லவ அரசனாகிய முதல் மகேந்திரவர் மனுக்குக்கீழ் அரசாண்ட ஒரு சோழர்குலக் குறுநிலமன்னனாதல் வேண்டும்.

கி. பி. எட்டாம்நூற்றாண்டிலிருந்த நந்திவர்மபல்லவமல்லன் என்னும் இரண்டாம் நந்திவர்மன் பழையாறையில் ஓர் அரண் மனையும் நந்திபுரவிண்ணகரம் என்னும் திருமால்கோயிலும் கட்டி இந்நகரை, மாமல்லபுரமும் காஞ்சியும் போலத் தனக்குரிய சிறந்த நகராக வைத்துக்கொண்டான். அன்றியும், இந்நகரின் பெயரை நந்திபுரம் என்றும் மாற்றிவிட்டான். பிற்காலத்திற் சோழர் ஆட்சிக்காலத்திலும் இந்நகர் பழையாறையாகிய நந்திபுரம் என்று வழங்கப்பட்டுளது (Ins 30 of 1931, 365 and 367 of 1924). இந்நகரில் இரண்டாம் நந்திவர்மன் கட்டிய நந்திபுரவிண் ணகரம் இவன்காலத்திலிருந்த திருமங்கைமன்னனால் பாடப்பட் டுள்ளது. இவ்வேந்தன் இந்நகரில் தங்கியிருந்தபோது தமிழ்வேந் தர்களாலும் சித்திரமாயன் என்னும் பல்லவ அரசகுமாரனாலும் முற்றுகையிடப்பட்டான் என்றும், அந்நாட்களில் இவன் படைத் தலைவன் உதயசந்திரன் என்பான் பெரும்போர்புரிந்து இவனை விடு வித்தான் என்றும் உதயேந்திரச்செப்பேடுகள் கூறுகின்றன(S. I. I. vol II. No. 74). எனவே, சோழர்குலக் குறுநிலமன்னன்பாலிருந்த இந்நகரை, இரண்டாம் நந்திவர்மன் கைப்பற்றிக்கொள்ளவே, தமிழ்வேந்தர்கள் ஒருங்குசேர்ந்து இதனை மீட்கமுயன்றும் இயல வில்லைபோலும். இவன் பேரனாகிய தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலும் பழையாறு என்னும் இந்நகரில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன என்று நந்திக்கலம்பகம் கூறுகின்றது.

பிற்காலச்சோழர்களின் முதல்வனாகிய விசயாலயன்முன்னோர் அங்கிருந்திருத்தல்வேண்டும். அவன் தஞ்சையைக் கைப்பற்றிச் சோழநாட்டின் தலைநகராகவைத்துக்கொண்டபின்னரும் சோழ அரச குடும்பத்தினர் இந்நகரில் இருந்துவந்தனர். முதற்பராந்தகசோழன் பேரனாகிய இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தரசோழன் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் நடுவில் இந்நகரிலிருந்து அரசாண்டான் என்று தெரிகிறது. வீரசோழியவுரையிற் காணப்படும் பழைய பாடல்கள் 'மேதகு நந்திபுரிமன்னர் சுந்தரச்சோழர்' (வீரசோ-யாப்பு. 11) என்றும், 'பழையாறைநகர்ச் சுந்தரச்சோழர்' (வீரசோ- அலங்.10) என்றும் கூறுவதால் இவ்வுண்மையை உணரலாம்.

முதல் இராசராசசோழன் தமக்கையாகிய குந்தவைப்பிராட்டியார் தஞ்சைமாநகரில் கி.பி. 1015ல் சுந்தரசோழவிண்ணகர் ஆதுர சாலை என்னும் மருத்துவநிலையம் ஒன்று நிறுவி அதற்கு மருத்துவ போகமாக நிலமும் பொருளும் அளித்து அவ்வுத்தரவைப் பழையாறையிலுள்ள அரண்மனையிலிருந்து அனுப்பியசெய்தி ஒரு கல்வெட்டிற் காணப்படுகின்றது (Ins. 248 of 1923).

கங்கைகொண்டசோழன் என்று வழங்கும் முதல்இராசேந்திர சோழன், பழையாறையில் தன் அரண்மனையிலிருந்துகொண்டு கி. பி. 1015-ல் கோயிலுக்குரிய நிலங்களையெல்லாம் அளக்குமாறு உத்தரவனுப்பினன் என்று உய்யக்கொண்டான் திருமலையிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது (Ins. 463 of 1908). கி. பி. 1017-ல் இவ்வேந்தன் இந்நகரிலிருந்தனுப்பிய மற்றோர் உத்தரவு வடஆர்க்காடுஜில்லாவிலுள்ள எம்பாடி என்ற ஊரில் வரையப்பெற்றுள்ளது (585 of 1906). இவன், பழையாறைநகர்க்கு முடிகொண்டசோழபுரம் என்று பெயரிட்டுக் கங்கைகொண்டசோழபுரம் அமைப்பதற்குமுன் அங்கிருந்து அரசாண்டான் என்று தெரிகிறது (271 of 1927). சோழமன்னர்களின் சரிதங்களை ஆராய்வதற்குப் பயன்படுவனவாய்ச் சென்னைப் பொருட்காட்சிச் சாலையிலுள்ள திருவாலங்காட்டுச்செப்பேடுகள் இவன் பழையாறையாகிய முடிகொண்டசோழபுரத்திலிருந்து கி. பி. 1019-ல் அளித்தனவேயாம் (S. I. I. Vol. III No. 205). இம்மாநகரின்

தெற்கெல்லையில் ஓடும் முடிகொண்டசோழப்பேராறும் இவ்வரசன் வெட்டுவித்ததே.

கி. பி. 1112-ல் முதற்குலோத்துங்கசோழன் இந்நகரிலிருந்த தன் அரண்மனையில் வாணாதிராசன் என்ற சிங்காசனத்தில் வீற்றிருந்தபோது தேவதானங்களைப்பற்றி அனுப்பிய ஓர் உத்தரவு அம்பர்மாகாளத்தில் வரையப்பட்டுளது.* இவன்மகன் விக்கிரமசோழன் கி. பி. 1122-ல் முடிகொண்டசோழபுரத்தில் தன் அரண்மனையிலிருந்து தென்னார்க்காடுஜில்லாவிலுள்ள எலவாணாசூர்க் கோயிலுக்கு நிவந்தம் அளித்த செய்தி அவ்வூரில் வரையப்பட்டுள்ளது (Ins. 168 of 1906). இவன்பேரன் இரண்டாம் இராசராசன் இந்நகரின்பெயரை இராசராசபுரம் என்று மாற்றித் தன் தலைநகராக வைத்துக்கொண்டான் என்று தெரிகிறது.

விக்கிரமசோழன், இரண்டாம்குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூவேந்தர்காலத்தும் வாழ்ந்த புலவர்பெருமானாகிய ஒட்டக்கூத்தர், அம்மூவருள் இரண்டாம் இராசராசன் ஆட்சிக்காலத்தில் தாம் பாடிய தக்கயாகப்பரணி என்னும் நூலில் கடைதிறப்பு என்ற பகுதியில்,

"உம்ப ராளும்அம ராபு ரந்தவிர லோக பால்ரெயில் காவல்கூர்
செம்பொன் மாடநிரை ராச ராசபுரி வீதி மாதர்கடை திறமினோ"

என்பது முதலான தாழிசைகளிற் பாராட்டியிருக்கும் இராசராசபுரி என்பது இப் பழையாறைநகரேயாம். இஃது அந்நாளில் இரண்டாம் இராசராசனுக்குத் தலைநகராயிருந்தாலன்றி இங்ஙனம் கடைதிறப்பில் பாராட்டப்பெற்றிராது என்பது ஒருதலை. அன்றியும் இறுதியில் தக்கனுக்கு அருள்புரியும்பொருட்டு இராசராசபுரியிலுள்ள இறைவன் இடபாரூடராய் எழுந்தருளினார் என்று அப் புலவர் கூறியிருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதொன்றாம்.

தக்கயாகப்பரணியின் பதிப்பாசிரியர், கடைதிறப்பிலுள்ள ஒரு தாழிசையின் அடியில் இராசராசபுரி என்பது தஞ்சாவூர் என்று

* Ins. 93 of 1910.

குறிப்பெழுதியுள்ளனர். இதுகாறும் எடுக்கப்பெற்றுள்ள கல்வெட்டுக்களால் தஞ்சாவூருக்கு இராசராசபுரி என்ற மற்றொரு பெயர் இருந்தது என்பது புலனாகவில்லை. ஆனால் பழையாறையாகிய இராசராசபுரம் என்ற தொடர் கல்வெட்டுக்களிற் காணப்படுகிறது. தஞ்சாவூரிலுள்ள கோயிலுக்கு இராசராசேச்சுரம் என்னும் பெயர் இருத்தலால் அந்நகரும் இராசராசபுரி என்று வழங்கியிருத்தல்வேண்டும் எனக் கருதி அங்ஙனம் குறிப்பெழுதினர்போலும்.

எனவே, பழையாறையே இராசராசபுரி என்றும் இராசராசபுரம் என்றும் வழங்கப்பெற்றது என்க.

பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியில் மூன்றும் இராசராசசோழனை வென்று சோழநாட்டைக் கைப்பற்றிய முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன் சோழநாட்டில் முடிகொண்ட சோழபுரத்தில் விசயாபிடேகமும் வீராபிடேகமும் செய்துகொண்டான் என்று அவன் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அன்றியும், பாண்டிநாட்டிலுள்ள கல்வெட்டொன்று அவ்வேந்தன் தான் விசயாபிடேகம் செய்துகொண்ட பழையாறையாகிய முடிகொண்ட சோழபுரத்தையும் சோணாட்டையும் தன்பால்வந்து அடைக்கலம் புகுந்த சோழமன்னனுக்கு மீண்டும் வழங்கினனென்று உணர்த்துகின்றது (Ins. 9 of 1926).

சோழமன்னனை வென்று சோழநாட்டைத் தன்னடிப்படுத்திய பாண்டிவேந்தன் இம்மாநகரில் வெற்றிமுடிசூடிக்கொண்டான் என்ற செய்தி, இது முற்காலத்திலே சோழர்க்குரிய தலைநகரங்களில் ஒன்றாயிருந்திருத்தல்வேண்டுமென்பதை நன்கு வலியுறுத்துவதாகும்.

எனவே, கி. பி. ஏழாம்நூற்றாண்டுமுதல் பதினான்காம்நூற்றாண்டுவரையில் இம்மாநகர் பழையாறை, நந்திபுரம், முடிகொண்ட சோழபுரம், இராசராசபுரம்* என்னும் பெயர்களைச் சிலவேந்தர்களின் ஆட்சிக்காலங்களில் எய்தி அன்னோர்க்குரிய இரண்டாவது

* Ins. 495 of 1907; Ins. 392 of 1908.

தலைநகராகச் சிறப்புடன் விளங்கிக்கொண்டிருந்தது எனலாம். அன்றியும், சோழர்கள் முடிசூட்டிக்கொள்ளும் நகரங்களுள் ஒன்றாகவும் இது நிலவிற்று என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்க தாகும்.

இந்நகரிலிருந்த கோயில்கள் :— (1) பழையாறை வடதளி. (2) பழையாறை மேற்றளி. (3) பழையாறைத் தென்றளி. (4) பட்டீச்சுரம். (5) திருச்சத்திமுற்றம். (6) அருண்மொழிதேவேச்சுரம். (7) பஞ்சவன்மாதேவீச்சுரம். (8) அரிச்சந்திரம். (9) இராசராசேச்சுரம். (10) கோபிநாதப்பெருமாள்கோயில். (11) நந்திபுரவிண்ணகரம் (12) சுந்தரப்பெருமாள்கோயில் என்பன.

இவற்றுள் வடதளி, மேற்றளி, திருச்சத்திமுற்றம், பட்டீச்சுரம் என்னுந் தலங்கள் சைவசமயகுரவர்களால் பாடப்பெற்றவை; நந்திபுரவிண்ணகரம் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது.

இதன் தற்காலநிலை:— காலசக்கரத்தின் சுழற்சியினால் உலகில் எத்துணையோ மாறுதல்கள் ஏற்படுகின்றன. பெரிய நகரங்கள் போர், பூகம்பம், கடல்கோள் முதலான நிகழ்ச்சிகளால் அழிவெய்திச் சிற்றூர்களாக மாறிவிடுகின்றன. பல சிற்றூர்கள் ஒன்றாகச் சேர்க்கப்பெற்றுப் பெரியதொரு நகரமாக அமைதலும் உண்டு. தலைநகரங்கட்குப் பிறவேந்தர் படையெழுச்சிகளால் ஆபத்தும் அழிவும் ஏற்படுவது இயல்பு என்பது அண்மையில் முடிவுற்ற மாபெரும் உலகப்போரால் நன்கறியக்கிடக்கின்றது. அத்தகைய போர்நிகழ்ச்சியொன்றால் பழையாறைமாநகர் அழிவிற்குள்ளாகி இந்நாளிற் சில சிற்றூர்களாகச் சிதறிக்கிடக்கின்றது.

அவ்வூர்கள் பழையாறை, முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம், திருமத்தடி, சோழமாளிகை, ஆரியப்படையூர், பம்பைப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், சுந்தரப்பெருமாள்கோயில், தாராசுரம், நாதன்கோயில், இராசராசேந்திரப் பேட்டை, அரிச்சந்திரபுரம், கோணப்பெருமாள்கோயில் என்பனவாம்.

இவற்றுள், திருமத்தடி என்பது திருமேற்றளி என்பதன் மரூஉ. சோழமாளிகை என்பது சோழமன்னர்களின் அரண்மனை யிருந்த இடம். இது, சுமார் ஒருமைல் நீளமும் முக்கால்மைல் அகலமும் உடையது. இதில் எஞ்சியிருந்த மதிற்சுவரின் ஒரு பகுதி 75 ஆண்டுகட்குமுன் நம் அரசாங்கத்தினால் இடிக்கப் பெற்றது என்று முதியோர்கள் கூறுகின்றனர். இதன் நிலப் பரப்பு முழுமையும் செங்கற்களாகவே இன்றும் உளது. சுந்தரப் பெருமாள்கோயில் என்பது கும்பகோணத்திற்கு மேற்கே புகை வண்டிநிலையமுள்ள ஓர் ஊராக இருக்கின்றது. தாராசுரம் என்பது இராசராசபுரம் என்பதன் மரூஉ. இது, கும்பகோணத்திற்குமேற் கில் அதனையடுத்துள்ள ஒரு புகைவண்டிநிலையமுள்ள ஊர். நாதன்கோயில் என்பது நந்திபுரவிண்ணகரம் அமைந்துள்ள இடம். இராசராசேந்திரப்பேட்டை என்பது கும்பகோணத்தின் மேல்பகுதி. இவ்விடத்திற் சோழர்களின் நாணயங்கள் அடிக்கு மிடம் ஒன்றிருந்தது என்று தெரிகிறது. கோணப்பெருமாள் கோயில் என்பது கோபிநாதப்பெருமாள்கோயில் என்பதன் மரூஉ. பம்பைப்படை, ஆரியப்படை, புதுப்படை, மணப்படை என்னும் நான்கு படைவீடுகள் இருந்த இடங்கள் அப்பெயர்களோடு நான்கு சிற்றூர்களாக இன்றும் உள்ளன. இந்நிலப்பரப்புக்களெல்லாம் அரிசிலாற்றுக்குத் தெற்கும் முடிகொண்டான் ஆற்றுக்கு வடக் கும் வளம்பொருந்திய இடங்களாகவே இன்றும் இருக்கின்றன.

பழையாறை என்னும் இம்மாநகரின் தொன்மைச்சிறப்புக்க ளெல்லாம் எடுத்துணர்த்துவன இதிலுள்ள கோயில்களும் அவற் றில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டுக்களுமேயாம்.

இதில், சோழமாளிகை என்ற பகுதியையாவது அரசாங்கத் தார் தோண்டுவித்தால் எத்துணையோ உண்மைச்செய்திகள் வெளி யாகும் என்பது திண்ணம்.

உ

# அதிவீரராமபாண்டியன்

திருவாளர். இராமசுப்பிரமணியநாவலரவர்கள்,
செந்தமிழ்நிலையம், தக்கலை.

சேரர் சோழர் பாண்டியர் என்னும் முத்தமிழ்மன்னர்களுள், பயிலருஞ் சிறப்பையுடைய பாண்டியர் பைந்தமிழ் பன்னலம்பெற்றுச் சிறக்குமாறு பல்லாற்றானும் முயன்றவராவர். அவரது தொன்மாபு பதினாறுவதநூற்றாண்டின்முன்னர்ப் பலகாரணங்களாற் சிதைவுற நேர்ந்தது. வன்மையும் வெற்றியும் மேற்கொண்டு மேம்பட்டுநின்ற விசயநகரப்பேரரசிற்குப் பாண்டியர் இறைசெலுத்தி வாழ்ந்துவருவாராயினர். அதன்பின்னர் மதுரையில் நாயக்கர்மரபு வேரூன்றித் தழைக்கத்தொடங்கியது. பாண்டியர்மரபைச்சேர்ந்தார் சிலர் மதுரையைநீங்கிப் பிறஇடங்களிற்சென்று சிற்றெல்லைக்குட்பட்ட இடங்களை ஆண்டுவந்தனர். எனவே, பாண்டிய அரசர் பலர் சிற்றரசர்களாகி வாழநேர்ந்தது.

அதிவீரராமபாண்டியன், அச்சிற்றரசர்களில் ஒருவன். இவன் கோற்கையையும் தென்காசியையும் தலைநகர்களாக்கிக்கொண்டு அரசாண்டவன் என்பர்.

"வெற்றிவேற்கை வீரராமன்
கோற்கையாளி குலசேகரன்"

என வரும் அடிகளால் இவன் கொற்கையிலிருந்து அரசாண்டனன் என்று கருதலாகும். இவன் தந்தை நெல்வேலிப்பாண்டியன் என்னும் பெயருடன், திருநெல்வேலியிலிருந்து அரசாண்டனன் என்றும் அவனுக்குக் குலசேகரன் என்னும் பெயரும் உண்டு என்றும் கூறுவர் சிலர். கொற்கை திருநெல்வேலிப்பக்கத்ததாகலின், கொற்கையை ஆண்டவன் குலசேகரன் என்றும் கொள்ளலாகும். குலசேகரன் என்பது பாண்டியர்க்கு வழங்கிவந்த பொதுப்பெயர் என்றும், அதிவீரராமனுக்கும் குலசேகரன் என்னும் பெயருண்டு என்றும், எனவே அவனே கொற்கையிலும் இருந்து அரசாண்டவன் என்றும் கொள்வாரும் உளர்.

இவனுக்குத் தமையன்முறையுடையவனாகிய வரதுங்கராம பாண்டியன் கரிவலம்வந்தநல்லூரில் இருந்து அரசுபுரிந்தனன் என்பர். பத்திச்சுவைநிரம்பிய பலபாடல்களும் பிரமோத்தர காண்டம் முதலியனவும் இவனால் செய்யப்பட்டன. இவன் மனைவியும் தமிழ்ப்புலமை கைவரப்பெற்றவள் என்ப. அதிவீரராமனும் வரதுங்கனும் பெரியதந்தை சிறியதந்தை மக்கள் என்று கருதப் படுகின்றனர். இவர்கள் இருவரும் சைவசமயத்தைச்சார்ந்தவர்கள் என்பது இவர்தம் பாடல்களால் அறியலாகும்.

அதிவீரராமனது காலம் இற்றைக்கு முந்நூற்றைம்பது யாண்டுகளுக்குமுன் என்ப. எனவே, இவனது அரசாட்சி பதினாறுவது நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்தது என்று கொள்ளத் தகும். இவனது ஆட்சி திருமலைநாயக்கன் ஆட்சிக்கு ஏறக்குறைய நூற்றைம்பதுயாண்டுகளுக்கு முற்பட்டது. காளமேகப்புலவர் இவனுக்கு முன் இருந்தவரும் குமரகுருபரர் இவனுக்குப்பின் இருந்தவரும் ஆவர்.

அதிவீரராமனது மனைவியாரும் சிறந்த புலமையுடையவர் என்று அறியப்படுகின்றது. அதிவீரராமன், சீவலமாறன் சீவல்லபதேவன் என்னும் பெயர்களையும் உடையன் எனத் தமிழ் நாவலர்சரிதைக்குறிப்புக் கூறும்.

> "தென்னவா மீனவா சீவலமாறு மதுரை
> மன்னவா பாண்டி வரராமா"

என்பதனால் வரராமன் என்பதும் இவன்பெயராகக் கருதப்படும். இவன் செங்கோன்மையுடையவன் என்பதும் நீதியை நன்கு ஆராய்ந்து வழங்குபவன் என்பதும் கல்வியில் மிக்க ஆர்வம் உடையவன் என்பதும் இவனால் இயற்றப்பட்ட நறுந்தொகை அடிகளால் நன்கு உணரப்படும்.

அதிவீரராமன் செய்த நூல்களுள், கம்பராமாயணம் சீவக சிந்தாமணி கபிலரகவல் திருக்குறள் முதலிய நூல்களில்வந்துள்ள கருத்துக்களும் தொடர்களும் காணப்படுகின்றன. புலவர்க்கு ஔடதம் எனச் சிறப்பிக்கப்படும் நைடதம் இவன்செய்த

நூல்களுள் சிறந்தது. திருக்கருவைவெண்பாவந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறையந்தாதி, கூர்மபுராணம் இலிங்கபுராணம், காசிகாண்டம் வாயுசங்கிதை, நறுந்தொகை என்பனவும் இவன் செய்த நூல்களாம். இவற்றுள் நைடதம் ஒன்றே இலக்கியச்சுவை நிரம்பியதாய்ச் சொற்செறிவும் பொருணயமும் சிறந்து விளங்குகின்றது.

நைடதம் நிடதசக்கரவர்த்தியான நளனது வரலாறுகூறுவது. இவ்வரலாறு வியாசபாரதத்தில்நின்றும் வடமொழியில் 'ஹர்ஷ' கவியால் பல அணிகளும் மணிபோல் மிளிர நைஷதம் என்னும் பெயருடையதொரு காவியமாக விரித்து எழுதப்பட்டது. இவ்வடமொழிநைடதமே அதிவீரராமபாண்டியனது நைடதத்துக்கு முதனூல் என்பது அவ்விருநூல்களின் கருத்தொப்புமைகண்டு உணரலாகும். வியாசபாரத நளன்கதையை அடிப்படையாகக்கொண்டு புகழேந்திப்புலவரால் நளவெண்பா என்பதொரு நூல் எழுதப்பட்டுள்ளது. அது தமிழ் நைடதத்திற்கு முற்பட்டது. நைடதம் சிறந்ததோர் இலக்கியமாகக்கொள்ளத்தக்கதாயினும், நளவெண்பாவிலே காணப்படும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அழகிய இனிய கருத்துக்கள் அதன்கண் அருகும். புகழேந்திப்புலவரது உவமை உருவகம் முதலிய அணிகள் தனிப்பட்ட நயமுடையன.

அதிவீரராமன் நைடதம்பாடிமுடிவதன்முன் அதைத் தன் தமையன் வரதுங்கனுக்குக் காட்டும்பொருட்டு ஒரு புலவர்கைக் கொடுத்தனுப்பினன். தனது நைடதத்தை எல்லாப்புலவரும் உவந்தேற்றுக்கொண்டதுபோலத் தமையனும் அதனை உவந்தேற்பன் என்பது அதிவீரராமனது கருத்து. ஆயின் அந்நூலைப் புலவர் சென்று காட்டி 'இது நிடதமகாராசன் வரலாறுகூறும் நைடதம்; நும் இளவலாற் செய்யப்பட்டது. நும்மிடம் இதனைக்காட்டுமாறு யான் விடுக்கப்பட்டேன்' என்று கூறியதும், வரதுங்கன் உள்ளம் வெறுப்புற்று அந்நூலை வாங்கியும் பாராது 'இவ்வேடு நன்றாக இருக்கின்றது என்று கூறுக' என்று புலவரைவிடுத்தான். புலவர் வாயிலாக நிகழ்ந்தது உணர்ந்த அதிவீரராமன் சினமிகப்பொங்கி 'என்மீது உற்ற பொறாமையால் இவன் இந்நூலை இகழ்ந்தனன்.

இவனை இன்னே என் வீரவாளுக்கிரையாக்குவேன்' என்று கருதிக் கொண்டு உருவியவாளுடன் அரமனைக்குட்புகுந்து நோக்க ஆண்டுத் தன் தமையன் சிவபூசைபுரிந்துகொண்டு இருப்பக் கண்டு 'பூசைமுடிவதுகாறும் தாழ்ப்பேன்' என்று வாளா இருந்தான். வரதுங்கன் பூசைமுடித்து வழக்கம்போல் பூசைமுடிவில், சிவபெருமான்மீது துதியாக,

'சங்கக் குழையனைத் தென்கருவாபுரித் தாணுவைவான்
கங்கைச் சடையனைப் பாடல் செய்யாத கவிப்புலவீர்
அங்கச் சுமைகொண் டெழுநான்கு கோடி அழிநரகப்
பங்கத்தில் வீழவன்றோ பொன்றுவார்தமைப் பாடுவதே'

என்னும் பாடலைப் பாடினன்.

அப்பாடலைக்கேட்ட அதிவீரராமன் 'இவனது வெறுப்பு எனது நூலின்மாட்டுத்தோன்றியதன்று. என்னைப் போன்றவனாகிய ஓர் அரசனை யான் மிகுத்துப்பாடியதே இவனது வெறுப்புக்குக்காரணமாயிற்று' என்று தெளிந்து தான் நினைந்ததை மறையாது கூறி, வரதுங்கனைப் பணிந்தான். வரதுங்கன் 'இனிப் பரனையன்றி நரனைப் பாடற்க' என்று அறிவுகொளுவியதுடன், 'இதனைப் பாடிமுடித்து நின் மதனியிடம் காட்டுக. அவள் ஒப்புக்கொண்டுவிடின் அதுவே நினதுநூல் சிறப்புடையது என்பதற்குப் போதுமானது' என்று கூறி உய்த்தனன்.

அதிவீரராமனும் தன் தமையன் கூறியது ஒக்கும் எனக் கருதியவனாகி, முன்போல நளனை மிகச்சிறப்பித்துரையாது பெரிதும் இலக்கியநயத்தைப் புறக்கணித்து அந்நூலை ஒருவாறு பாடிமுடித்துத் தன் தமையன்மனைவிபால் உய்த்தனன். அவள் அதனை உற்றுணர்ந்து 'இந்நூலினதுநடை வேட்டைநாய்நடை போன்றுளது' என்று அந்நூல் கொணர்ந்தவனிடம் கூறிவிடுத்தனள். அது கேட்ட அதிவீரராமன் சினமிக்கவனாய் 'முன்னரோ தமையன் எனது நூலை இகழ்ந்தான். இப்பொழுது அவன்மனைவியும் இவ்வாறு கூறினள்' என்று கருதி வரதுங்கன்மீது போர் தொடுக்க நினையலாயினன். அதனை உணர்ந்த வரதுங்கன்மனைவி

'செஞ்சுடரின் மைந்தனையுந் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.'

என்ற பாடலை எழுதிவிடுத்தாள். அதுநோக்கிச் சினந்தணிந்த அதிவீரராமன், தன் தமையனையும் மதனியையும் சென்று பணிந்து தன்குற்றம் பொறுக்கும்படி வேண்டினன். வரதுங்கன் மனைவியைநோக்கி, அதிவீரராமன், 'எனது நைடதநடை வேட்டை நாய்நடைபோன்றது என்றது என்னை? புலவர்கள் அனைவரும் அதனைக் கரும்புபோலும் என்று சிறப்பிக்கின்றனரே,' என்று கூற, அவள் 'நானும் புதிது ஒன்றும் கூறினேனில்லை. புலவர் கூறிய கருத்தையே யானும் கூறினேன். வேட்டைநாய் முன்னர் வேட்கை மீதூர்ந்து ஊக்கங்கொண்டு ஓடி மீளும்பொழுது தான் வேட்டை மேற்சென்றதனால் உண்டாய களைப்புடன் ஒல்கிமெல்கிச்செல்லும். கரும்பும் அடிதொடங்கித் தின்னுந்தோறும் சுவைகுறைந்து தோன்றப்பெறும்; நுனிக்கண் சுவையின்றாகும். நைடதமும் முதற்கண் மிக்க சொற்பொருட்செறிவுடையதாய்ச் செல்லச்செல்ல மெலிந்துதோன்றுகின்றது' என்றாள். அதிவீரராமன் அதுகேட்டு உள்ளம் அமைதிகொண்டனன் என்பர்

நைடதம் செல்லச் செல்லச் சொன்னயமும் பொருணயமும் குறைபட்டு ஒழுகுவது என்பது உண்மையாயினும், இவ்வரலாறு உண்மையானது என்று கொள்வதற்கு இலக்கியச்சான்றுகள் அகப்படவில்லை.

நைடதம் பாடிமுடிந்தபின்னர் அதிவீரராமன் மக்களைப் புகழ்ந்துபாடவில்லையென்றும் வெண்பாவந்தாதி முதலியவற்றால் இறைவனைப் புகழ்ந்துபாடியது, தமையன்கூறியதனாலாகும் என்றும் கூறுவர். அந்நூல்களிற் காணப்படும் பலபாடல்கள் அதிவீரராமனது இயல்பான பத்திப்பெருக்கைக் காட்டுவனவாக இருக்கின்றன. திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி முதலியவை குட்டித் திருவாசகம் என்று பாராட்டப்படுகின்றன.

# மன்னார்குடி இராசகோபாலஸ்வாமிகோயிற் *கல்வெட்டுக்களின் சுருக்கங்கள்

[திருவாளர் வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.]

## முன்னுரை

மன்னார்குடி என்பது சோழநாட்டில், திருமால் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுள் ஒன்றாகும். இத்தலத்துள்ளகோயிலைப் போன்றதொரு பென்னம்பெரிய கோயிலைத் தென்னாட்டில் காண்பது அரிது. இத்திருக்கோயிலின் கருப்பஇல், அர்த்தமண்டபம் மூன்றாம்கோபுரம் இவைகள்மாத்திரம், சோழநாட்டைக் கி.பி. 1070 முதல் 1120 முடிய ஆண்ட முதற்குலோத்துங்கமன்னன்காலத்திற் கற்றளியாகக் கட்டப்பெற்றபெருமையும் பழமையும் வாய்ந்தனவாகும். எஞ்சியபகுதிகளெல்லாம் தஞ்சையை ஆண்ட நாயக்கமன்னர்களாற் கட்டப்பெற்றிருத்தல்வேண்டும். இச்செய்தி அங்குத் தூண்களிலும் பிறவற்றிலும் செதுக்கப்பட்டுள்ள படிமங்களைக்கொண்டு உணரத்தகும். சோழமன்னர்கள் காலத்தில் எடுப்பிக்கப்பெற்ற திருமால் திருக்கோயில்களின் அமைப்புமுறை எவ்வாறிருக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் பேரவாவுடையவனாய் இருந்தேன். இந்நிலையில் மன்னார்குடி நேஷனல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. இராமநாதபிள்ளையால் என்னை, அறியப்பெற்ற அத்திருக்கோயிற் கண்காணிப்பாளர் திருவாளர் கல்யாணசுந்தரம்பிள்ளையவர்கள் அக்கோயிற் கல்வெட்டுக்களை ஆய்ந்துகொடுக்குமாறு பணித்தனர். யான் இரண்டுநாட்கள் அங்குத் தங்கி அக்கோயிற் கல்வெட்டுக்களைப் படித்து எழுதிக்கொடுத்தேன். அவைகள் பலவிடங்களில்

---

* கல்வெட்டுத்துறையாளர் இக்கோயிற் கல்வெட்டுக்களைப் படியெடுத்துச்சென்று, அவைகளின் சுருக்கங்களை 1897-ஆம் ஆண்டுக் கல்வெட்டு அறிக்கையில் வெளியிட்டுள்ளனர்.

மிகவும் சிதைந்துவிட்டன. கல்வெட்டுக்களுக்கு எண்ணெய்தீட்டி வைக்கும்வழக்கம் இல்லாமையால் ஏற்பட்ட இச்சிதைவை அறிந்து வருந்திய என் நிலையைக்கண்டு கோயிற் கண்காணிப்பாளர் விளக்கெண்ணெய்யைக் கல்வெட்டுக்களுக்குப்பூசச்செய்து என்னை மகிழ்வித்தனர். இவர் தம்செய்கையைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இக்கல்வெட்டுக்கள் இக்கோயில் தலவரலாற்றின் இறுதியில் சேர்க்கப்பெற்று அச்சாகிவருகின்றன. எனினும் நம் "சேந்தமிழ்" பயில்வார்க்குப் பயன்படுமாறு கோயிலின் அமைப்புமுறை, கல்வெட்டுக்களின் சுருக்கங்கள், எடுத்துக்காட்டாக ஒரு கல்வெட்டு: இவைகளை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

## கோயிலின் அமைப்பு முறை.

கோயில் கிழக்குநோக்கியது. கருப்ப இல்லின் தெற்கு மேற்கு வடக்குப்புறப்பக்கங்களில் திருமால்படிமங்கள் நின்றதிருக்கோலங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபத்தின் தென்புறத்தில் பிள்ளையாரும் வடக்குப்பக்கத்தில் துர்க்கையும் எழுந்தருளுவிக்கப்பெற்றிருக்கின்றன. அர்த்தமண்டபத்தின் வாசலடியில் உள்ள இரு வாயில்காவலாளர்களுக்கும் நான்கு நான்கு கைகள் இருக்கின்றன. விமானம் செங்கல் திருப்பணியாலானது. அதிலுள்ள சுதைப்படிமங்கள் கண்ணபிரானதுசெயல்களை உணர்த்துவனவாயுள்ளன. முதற்குலோத்துங்கசோழன்காலத்தில் திருமால்கோயிலின் அமைப்புமுறையை விளக்கிநிற்கும் திருக்கோயில் இஃது ஒன்றேயாகும். ஆதலின் இதனைப் போற்றிப் புரந்தருதல் சைவ வைணவ நன்மக்களது முதற்கடமையாகும்.

## கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயிலின் கருப்பஇல், அர்த்தமண்டபம், மூன்றும் கோபுரம் ஆகிய இவ்விடங்களில் ஆறுகல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் முதற்குலோத்துங்கன்காலத்தவை இரண்டும், திரிபுவனசக்கரவர்த்தி இராஜராஜதேவர்காலத்தது ஒன்றும், திரிபுவனசக்கரவர்த்தி இராசேந்திரசோழதேவர்காலத்தவை இரண்டும், கோனேரின்மைகொண்டான் காலத்தது ஒன்றும் ஆக உள்ளன.

## கோயில் எடுப்பிக்கப்பெற்றகாலம்.

இக்கல்வெட்டுக்களுள் முதற்குலோத்துங்கன் அரியணை ஏறிய நாற்பத்துமூன்றும் ஆண்டில் அதாவது கி. பி. 1113ல் பொறிக்கப்பெற்றதுதான் மிகவும் பழமையானதாகும். அதில் இக்கோயில் குலோத்துங்கசோழவிண்ணகரம் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. எனவே இம் முதற்குலோத்துங்கன்பேரால் இக்கோயில் எடுப்பிக்கப்பெற்றிருக்கவேண்டும் என்ற செய்தி புலனாகிறது. ஆதலின் இக்கோயில் கற்றளியாகக் கட்டப்பெற்று இற்றைக்கு 833-ஆண்டுகள் ஆகின்றன என்று கொள்ளுதல் தகும்.

## திருமால் திருப்பெயர்

இக்கோயிலில் உள்ள திருமாலுக்குக் குலோத்துங்கசோழவிண்ணகர ஆழ்வார், வண்டுவராபதி ஆழ்வார், வண்டுவராபதி மன்னார், இராஜாயிராஜ விண்ணகரப்பெருமாள்: என்னும் பெயர்கள் வழங்கப்பெற்றிருந்தன.

## ஊரின் பெயர்.

இவ்வூர் சுத்தமலிவளநாட்டுப் பிரமதேயம் தனியூர் இராஜாயிராஜ சதுர்வேதிமங்கலம் என்னும் பெயருடன் திகழ்ந்துவந்தது.

## அளிக்கப்பெற்ற நிபந்தங்கள்.

ஸ்ரீவண்டுவராபதி ஆழ்வார்க்குச் சிறுகாலைசந்திக்கு, குலோத்துங்கசோழவளநாட்டுத் திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரி உடையான் ஒருவன் நிலம் இறையிலியாக விட்டிருந்தான்.

மடப்புற இறையிலியாக நிலம் விடப்பெற்றிருந்தது. வண்டுவராபதிமன்னாரும், இவ்வூர்ச் சிவன்கோயில் இறைவர் கயிலாயநாதரும் எழுந்தருளுகைக்கு நிபந்தங்கள் அளிக்கப்பெற்றிருந்தன.

கோநேரின்மைகொண்டான் என்னும் மன்னன் தான் பிறந்த நட்சத்திரமாகிய புரட்டாசி மூலநாளில் ராஜாயிராஜ விண்ணகரப் பெருமாளுக்கு ஆராதனை நடாத்தி எழுந்தருளப்பண்ணுவதற்கு பன்னிரண்டுமா நிலத்தை அளித்துள்ளனன்.

காம்பநாடும், நகரங்களும், கள்ளப்பற்றும் மாவிதுகொடுத்து வந்தனர்.

## எடுத்துக்காட்டாக ஒரு கல்வெட்டு.

இருக்குமிடம்;—மூன்றும் கோபுரவாசல் நிலைக்கல்லின் தென் பக்கம்.

அரசன்:—கோநேரின்மைகொண்டான்.

வரி

ஸ்வஸ்தி ஸ்ரீ
திரிபுவன
சக்கரவர்த்திகள்
கோனேரின்மை
கொண்டான் ரா
ஜாதி ராஜசதுர்
வேதி மங்கல
த்து சபையார்
க்கு இவ்வூரில்
ராஜாதிராஜவி
ண்ணகர எம்பெரு
மாள் திருவிடையா
ட்டம் ஆனநிலம் ப
ன்னிரண்டு மாவுக்கு
ம் பன்னிரண்டாவது
வரையும் பத்தாக
விட்டு பத்து நாலு க
டமை கொண்டார் க
ள் ஆகவும். இந்நாளே தி
ருவாராதனைகுறை ஊ
டொறும் கேட்டோ
ம் பதின்மூன்றுவது ஆ
டிமாதமுதல் முதலி
டங்க இறை இலி ஆக
விடவும் நம்முடைய ஆ
ட்டைப் பிறந்தநாள் ஆன
புரட்டாதி மூலத்திலே
திதம் ஆக ஸர்வ வாஹ
னங்களிலும் ஊரிலே
திருநாள் எருந்தருளு
விக்கவும் இக் கோ
யிலில் நலிவு செய்யா
தொழியவும் பண்ணி
க் குடுக்க இவை வழு
தய தரையன் எழு
த்து நாள் இருநூ
ற் றறுபத்தொன்று
திருவாராதனமும்
நடத்தி திருப் பிரியு
ம் பெருமாள் ஆட்டை
த் திருநக்ஷத்திரத்தி
லே புரட்டாதிமாதம்
மூலத்திலே திவ்யமா
க கொண்டு திருநா
ள் எழுந்தருளியும்
பிரசாதிக்கவு. மா
ஸங்தொறும் திங்
கள் திருநாள் எழுந்த
ருளவும் ஸர்வவாஹனங்களில்
மாறி அருளி எழுந்தருளவும் எ
ழுதின திருமுகப்படியே
எழுந்தருளிவிக்கவும்
இப்படிக்கு எழுதின திருமு
கப்படியே கல்வெட்டி
கொள்ளக்கடவதாகவும் சொ
ன்னோம். இப்படிசெய்க பண்பால் உ
ளூர்தலை சேலத்துடையா
ன் ... ... ... ஈயனெழுத்து.

உ

# "இளம்பூரண அடிகளும் மணக்குடவரும்"

(திரு. க. வெள்ளைவாரணர் அவர்கள்)

இப்பொருள்பற்றித் திருவாளர் T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் செந்தமிழ் சஉ-ஆம தொகுதி 10—12-ஆம் பகுதியில் எழுதிய ஆராய்ச்சியுரையினையும் செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் அக்கட்டுரைக்குறிப்பாக வெளியிட்ட மறுப்பினையும் செந்தமிழ் இதழுறுப்பினர்கள் நன்கறிவார்கள்.

1 தாமெடுத்துக்காட்டிய 'தண்கடலசைவளி' யென்ற செய்யுள் இளம்பூரணருரைப்பாயிரமென்றும், 2 அச்செய்யுளால் இளம்பூரணர் தொல்காப்பியத்துக்கு உரைவரைதற்குமுன்னரே கொங்குவேண்மாக்கதைக்குக் குறிப்புரையும் திருக்குறளுரையும் இயற்றியுள்ளாரென்றும், 3 இளம்பூரணர் தம் முற்பருவத்து மணக்குடையார் எனக் குடிப்பெயரால் வழங்கப் பெற்றகாலத்துப் 'பெருங்கதைக்குறிப்பு திருக்குறளுரை யென்பவற்றையும், தாம் துறவுபெற்று இளம்பூரண அடிகளென்னு மியற்பெயராற் சிறப்பிக்கப் பெற்றகாலத்துத் தொல்காப்பியவுரையினையும் இயற்றியுள்ளனரென்றும், 4 பொருளதிகார இளம்பூரணருரைப்பகுதியிலும் திருக்குறள் மணக்குடவருரைப்பகுதியிலும் ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, தீவினையச்சம், கள்ளுண்ணாமை முதலியவற்றுக்கெழுதிய விளக்கவுரைகள் இரண்டிலும் பெரும்பாலும் ஒத்திருத்தலுடன் உரைநடைப்போக்கு வேறுபடாமலிருத்தலும் இவ்வுண்மையை வலியுறுத்துமென்றும் திரு. பண்டாரத்தாரவர்கள் தம் கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

1. திரு. பண்டாரத்தாரவர்கள் தாம் ஆராய எடுத்துக்கொண்ட 'தண்கடலசைவளி' என்ற பாடல் தமக்குக் கிடைத்த வரலாற்றினைக் குறிப்பிடாது சேறலானும், 1922-ஆம் ஆண்டு செந்தமிழில் த. மு. சொர்ணம்பிள்ளையவர்களால் பெயர்விழைபான் என்ற பெயரால் வெளியிடப்பெற்ற இப்பாடற்பொருளை அவர் ஏட்டினைப் பரிசோதித்து 1920-ஆம் ஆண்டில் அகத்திணைப் புறத்திணையியல்களை வெளியிட்ட திரு. கா. நமச்சிவாயமுதலியாரவர்களும்

மகாமகோபாத்தியாய ஐயரவர்களும் பிறரும் மேற்கொண்டு தம் பதிப்புக்களில் வெளியிடாமையினாலும், வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள், சொர்ணம் பிள்ளையவர்கள்பிரதியை அவரால் வேண்டியவாறு மாற்றிக்கொண்ட திரிபுடையது எனத் தம் பதிப்புரையிற் கூறுதலானும் இப்பாயிரம் பழம்பாடலன்றென்றும், புதிதாக இயற்றிச்சேர்க்கப்பட்டதொரு போலிச்செய்யுளே யென்றும், 2. இதனை யுண்மையெனவே கொள்ளினும் பண்டாரத்தாரவர்கள் கூறுகிறபடி 'பண்டேகொங்குவேண்மாக்கதைக்குறிப்புரைகண்டோன்' எனப் பின்னுள்ள அடிகளோடு இயைத்துப் பொருள்கூறுது, 'தொல்காப்பியனுரை முத்திறவோத்தினுக் கொத்தசீர்க் காண்டிகை பண்டே தந்தனன்' என முன்னுள்ள அடிகளோடு மாற்றிப் பொருள்கொள்ளவும் அமைந்திருத்தலால் அவர் கூறுமாறு திருக்குறளுரைசெய்தபின்னரே தொல்காப்பியவுரை இயற்றப்பெற்றதென ஒருதலையாகத் துணித லியலாதென்றும், 3. மணக்குடையார் என்பது அந்தணர்க்குரிய குடிப்பெயரென்பதும் இளம்பூரணர் அக்குடியிற் பிறந்தனரென்பதும் அதுகொண்டு மணக்குடையாரென வழங்கப்பட்டனரென்பதும் திரிபற்ற பிறசான்றுகொண்டு நிறுவப்பட்டாலன்றி இப்பாடலில் 'மணக்குடிபுரியான்' என்றிருப்பதொன்றேகொண்டு மணக்குடையார் என்பது இள்ம்பூரணர்குடிப்பெயரே எனக் கோடல் பொருந்தாதென்றும், அவ்விருபெயரும் ஒருவரையே குறிக்குமாயினும், மக்களுள் ஒவ்வொருவரும் தம் இயற்பெயருங் குடிப்பெயருமாகிய இரண்டுங்கொண்டு சுட்டப்படுதல் வழக்கில்லையென்றும், ஓராசிரியரியற்றிய பலநூல்களுள் ஒன்று அவர்க்குரிய ஒருபெயராலும் மற்றொன்று அவர்தம் வேறுபெயராலும் வழங்குதல் யாண்டும் கண்டதில்லையென்றும், திருக்குறள் மணக்குடவருரை தொல்காப்பியம் இளம்பூரணருரை இவற்றைப் பதிப்பித்தோர் முதலியோர் இப்பாயிரப்பொருளையுடம்பட்டு வெளியிட்டிலரென்றும், எனவே இளம்பூரணர் மணக்குடவர் என்பன இருவேறு உரையாசிரியர்களைக்குறித்த பெயர்களே யென்றும், 4. திருக்குறள் மணக்குடவருரைப்பகுதியும் இளம்பூரணர் பொருளதிகாரவுரைப்பகுதியும் ஒத்துக்காணப்படுதற்கு ஆதியுரையாசிரியராய இளம்பூரணருரைப்பகுதியைப் பின்வந்த மணக்குடவர் பொன்னேபோற் போற்றி எடுத்தாண்டமையே காரணமாமென்றும் உதவிப் பத்திராசிரியரவர்கள் நான்குகூறுபடுத்தித் தம் மறுப்புரையினை நிகழ்த்தியுள்ளார்கள்.

இவ் விருவர்கொள்கைகளையும் காய்த லுவத்தலகற்றி யாராய்தல் அறிவுடையார்கண்ணதாம்.

திரு. பண்டாரத்தாரவர்கள் தம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட 'தண்கடலசைவளி' யென்னும் பாடல் த. மு. சொர்ணம்பிள்ளையவர்களாற் பெயர்விழையான் என்று கைச்சாத்திட்டுச் செந்தமிழில் வெளியிடப்பட்டதே யென உதவிப்பத்திராசிரியர் நம்பிவிட்டமையினாலேயே இம்மறுப்புரையினை யெழுதினார்களென அறிகின்றோம். இம்மறுப்புரைக்குமுதற்காரணமாகவுள்ள இவ்வுண்மை ஆராய்ந்து துணியப்படுமானால் அவர்களாற் பின்னர்க்கூறப் பெற்ற தடைகளனைத்தும் வலியிழத்த லுறுதி. திரு. பண்டாரத்தாரவர்கள் தாம் ஆராயஎடுத்துக்கொண்ட பாடல் தமக்குக் கிடைத்த வரலாற்றை விரி வஞ்சிக் கூறாதுபோயினும், அதுபற்றிய உண்மையினைக் காணத் தலைப்பட்ட உதவிப்பத்திராசிரியரவர்கள் திரு. பண்டாரத்தாரவர்களுக்கெழுதி "நீங்கள் காட்டிய பாயிரப்பாடல் உங்களுக்குக் கிடைத்த வரலாறென்னை" என்று வினவித் தெரிந்தபின்னர் இம்மறுப்புரையை எழுதியிருப்பார்களானால் அச் செயல் உண்மையொன்றே வெளியிடுதலில் நாட்டமுடைய பத்திராசிரிய ரியல்பை நன்கு புலப்படுத்தியிருக்கும். அவ்வாறின்றி விசாரிப்பின்மையால் நிகழ்ந்த தம் நம்பிக்கையினையே யடிப்படையாகக்கொண்டு மறுப்புரைவரைய முற்பட்டமை உண்மைநிகழ்ச்சியை இதுவென ஆராய்ந்துளக்கொள்ளும் அவாவின்மையினையே புலப்படுத்திநிற்றல் காணலாம். உதவிப்பத்திராசிரியர் ஐயுற்றவாறு செந்தமிழிற் சொர்ணம்பிள்ளையவர்களால் வெளியிடப்பட்ட பாயிரவடிவம் இங்குப் பண்டாரத்தாரவர்களால் இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லையென்பதும், அப்பாடல் பண்டாரத்தாரவர்கட்குக் கிடைத்த தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணருரையில் அகத்திணையியல் முதல் பொருளியல்முடியவுள்ள கையெழுத்துப்பிரதியின்முன்னர் வரையப்பெற்றிருப்பதென்பதும் அப்பாயிரவடிமே இவண் அவர்களால் ஆராய எடுத்துக்கொள்ளப்பெற்றதென்பதும் ஆகியவுண்மையினை உதவிப்பத்திராசிரியரவர்கள் தெரிந்திருப்பின் இப்பாயிரப்பாடலைப் போலிச்செய்யுள் எனக் கூற வொருப்படாரென நினைக்கின்றேன். திரு. பண்டாரத்தாரவர்கள் கட்டுரையிற் காட்டப்பெற்ற இப்பாயிரத்திற்கு உதவிப்பத்திராசிரியரவர்கள் தம் செந்தமிழிற் கண்ட பாடபேதங்களைக் கீழ்க்குறிப்பாக வெளியிட்டிருப்பதனை அன்பர்கள் பார்த்திருப்பார்கள். இங்ஙனம் பண்டாரத்தாரவர்கள் காட்டிய பாயிரமும் செந்தமிழில் வெளிவந்த பாயிரமும் பாடபேதங்களால்தம்முள் வேறுபடுவதொன்றே இவ்வாராய்ச்சிக்குத் திரு. பண்டாரத்தாரவர்கள் செந்தமிழில் சொர்ணம்பிள்ளையவர்களால் வெளியிடப்பெற்ற பாடலைத் துணைக்கொள்ளவில்லையென்பதனை நன்கு தெளிவிக்கும். இவ்வுண்மையினை உதவிப்பத்திராசிரியரவர்கள் எண்ணிப்பார்த்ததாகத் தோன்றவில்லை. அன்றியும், திரு. வையாபுரிப்பிள்ளையவர்கள்போன்ற சிலர்

கையிலுள்ள ஏடுகளிற் காணப்பட்டவற்றையே உண்மையெனக்கோடலும் ஏனையோர் ஏடுகளிலும் கையெழுத்துப்பிரதிகளிலும் காணப்பட்டவற்றைத் திரிபுடையதென ஒதுக்குதலும் நடுவுநிலையாளர்க்கு அடாதசெயலாம். 1922-ஆம் ஆண்டு சொர்ணம்பிள்ளையவர்கள் அண்மையில் தமக்குக்கிடைத்த சேந்தன்மங்கலப் பொருளதிகாரப்பிரதியிலுள்ளதென விரைந்து வெளிப்படுத்திய இப்பாயிரம், அது கிடைப்பதற்குமுன் திரு. கா. நமச்சிவாயமுதலியாரவர்களால் 1920-ஆண்டில் வெளியிடப்பெற்ற அகத்திணை புறத்திணையியல்களின் பதிப்பிற் குறிக்கப்பெறவில்லையெனக் கூறி அதுகொண்டு அதனைப் போலியென்றல் எங்ஙனம் ஒத்துக்கொள்ளப்படும்? திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் தம் மனம்போனவாறு தொல்காப்பியச் சூத்திரங்களையும் பிறவற்றையும் திரித்துள்ளார் என்பதனைப் பலரும் அறிவர். அச்செய்தியை உதவிப்பத்திராசிரியர் மட்டும் உணராதிருக்கவியலாது. அங்ஙனமாகவும் அவர் தம் உரைகொண்டு சொர்ணம்பிள்ளையவர்கள் உண்மைகாண விரைந்து வெளியிட்ட இப் பாயிரச்செய்யுளைப் போலியென ஒதுக்கிவிடுதல் திரிபில்லாத ஏதுவாகாது. இனி இப்பாயிரப்பொருளை மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் முதலியோர் மேற்கோளாக எடுத்தாளாமையொன்றேபற்றி இப்பாடல் அவர்களால் அறிந்து ஒதுக்கப்பட்டதாகும் எனக் கூறுதற்கில்லை. மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை யென்னுங் காப்பியங்களை முதன்முதல் வெளியிடுதற்குமுன்னரே அந்நூல்களிரண்டும் சுப்பராயச்செட்டியாரவர்களால் வெளியிடப்பட்டுள்ளமையினை இன்று நாம் அறியப்பெறுகின்றோம். ஆனால் இவை வெளிவந்தசெய்தி மகாமகோபாத்தியாய ஐயரவர்களால் அவர்தம் பதிப்புரையிற் குறிக்கப்பெறாமையொன்றேபற்றி மேற்குறிப்பிட்ட வெளியீடுகளைப் பொய்யென மறுத்துவிடுதல் கூடுமோ? ஆகவே இன்னோரன்ன தடைகளாகிய எடுத்துக்காட்டுக்கள் இப்பாயிரத்தைப் பிற்காலத்தார் தம் போலிச்செய்யுளெனச் சாதித்தற்கு எட்டுணையும் பயன்தாரா என்பதனை அறிஞர்கள் நன்குணர்வர்.

இவ்வுரைப்பாயிரம் கொங்குவேண்மாக்கதைக் குறிப்புரையின்பொருட்டோ அன்றித் திருக்குறளுரையின்பொருட்டோ இயற்றப்பட்டதன்றித் தொல்காப்பியவுரையின் சிறப்புணர்த்தவெழுந்த பாயிரமாதலின் அவ்வுரையினைச் சிறப்பிக்கக்கருதிய அவர்காலப்புலவர் அதனைப் 'பண்டேதந்தனன்' எனக் கூறி ஏனையிரண்டுநூல்களின் உரைகளையும் அதற்கு முன்பின் என்னுஞ் செவ்வியின்றி மயக்கவைக்குந்நிலையிற் குறிப்பிடமாட்டார். "தொல்காப்பியவுரை தலைகடைகூட்டித் தந்தனன், அவன் யாவனெனின்

பண்டே பெருங்கதைக்குறிப்புரை கண்டோன், தேவர் பன்மணிக்குறட் பான் மதிப்பிடப் பொறித்தோன்" என அவ்வாசிரியர் முன்னர்ச்செய்த வேறுநூல்களையுங் குறிப்பிட்டு அவற்றையியற்றியகாலத்து அவர்க்கு வழங்கிய குடிப்பெயரிதுவெண்பார், 'குணகடற் செல்லூர் மலைத்துடி புரியான்' எனக் குறிப்பிட்டுப் பின்னர் இத்தொல்காப்பியவுரைப்பாயிரத்தாற் சிறப்பிக்கப் பெறும்நிலையில் அவர்தம் கோலத்தை விளக்குவார்,

> "அந்தணன் துறவோன் அருமறை யுணர்ந்த
> இளம்போதி பயந்த புனிதன்
> இளம்பூரணன்"

எனச் சிறப்பித்து இங்ஙனம் துறவுநிலையில் நின்ற இளம்பூரணராலியற்றப் பெற்று அவர்தம் துறவுநிலைகுறித்த இயற்பெயரால் வழங்கும் இத் தொல் காப்பியவுரை என்றும் நின்றுநிலவுக என வாழ்த்துவார், "இளம்பூரணனுரை யினிதுவாழ்கீக்கென்" என முடித்தாராதலின் உதவிப்பத்திராசிரியர் குறித்தவாறு இதன்கண் வந்துள்ள பண்டே என்பதனைக் கண்டபடி முன் னர் மாற்றிப் பொருள்கோடல் பொருந்தாதென்பது புலனும். அன்றியும், 'மாக்கதைக்குறிப்பு' எனக் ககரவொற்று மிகாமை முதலிய எழுத்துப்பற்றிய வழுக்கள் எந்த நூல்களிலும் நேர்வன என்பதனை ஏடுபார்க்கும் பயிற்சி யுடையார் இயல்பாக அறிவார்கள்.

'மணக்குடியுடையார்' என்னுங் குடிப்பெயர் வைதிக ஒழுக்கினராகிய வேதியர்க்குரிய குடிப்பெயரெனத் தோன்றவில்லை. 'இளம்போதிபயந்த புனிதன் இளம்பூரணன்' என இவ்வுரையாசிரியர் பாராட்டப்பெறுதலால் அக்காலத்துப் புத்தசமயத்தை மேற்கொண்டு அறவொழுக்கிற் றலைநின்ற இளம்போதியார் என்பவர்க்குப் பிறப்புமுறையிற் புதல்வராகவோ, அன்றி ஆசிரியர் மாணவர் ஆகிய சிறப்புமுறையிற் புதல்வராகவோ விளங்கியவர் இளம்பூரண அடிகள் என்பதுமட்டும் உய்த்துணர்ந் துரைக்கப்படுமன்றித் தமிழ்நாட்டிற் புலவர் பலர் குடிவரவுகளை ஆராய்ந்து துணிதற் கேற்ற வரலாற்றுச்சான்றுகள் மறைந்துபோன இந்நாளில் வேறுபலசான்றுகளால் தெளிவிக்கப்படுவதன்றாம். ஆதலின் இதற்குப் பிறசான்றுகளை நாடிநிற்றல் எளிதின் நிறைவேறுதசெயலாமென அறிஞருணர்வர். இனி இவ்வுரை யாசிரியர்தம் தந்தையின்பெயர் இளம்போதியார் எனப் பாயிரங்கூறு கின்றது. இளம்போதியார் என்னும் இப்பெயர் சங்ககாலத்தும் மக்களுக்கிட்டு வழங்கப்பெற்றதென்பதனை நற்றிணை எஉ-ஆம் பாடலைப் பாடிய புலவர்

பெயர் இளம்போதியார் எனக் காணப்படுவதுகொண்டும் நன்குணர்கின்றேம். ஆதலின் இத்தகைய பெயர்வழக்கம் சங்ககாலந்தொட்டுநிகழ்கின்றமையும் புலனாதல் காண்க.

திருத்தொண்டர்புராணம் செய்தருளிய ஆசிரியரது இயற்பெயர் அருண்மொழித்தேவரென்றும் அவர்தம் குடிப்பெயர் சேக்கிழார் என்றும் இக்காலத்தும் வழங்கக் காண்கின்றேமாதலின் "மக்களுள் ஒவ்வொருவரும் இயற்பெயருங் குடிப்பெயருமாகிய இரண்டுங்கொண்டு சுட்டப்படுதல் வழக்கில்லை" யென்னும் உதவிப்பத்திராசிரியர்கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதன்றாம். இனி, மணக்குடையார் என்ற குடிப்பெயரால் வழங்கப்பெற்றகாலத்துத் திருக்குறளுரையினையும் இளம்பூரணஅடிகள் என விளங்கிய துறவுநிலையில் தொல்காப்பிய வுரையினையும் உரையாசியர் ஒருவரே இயற்றியருளினார் என்பது இப்பாயிரங்கொண்டு உய்த்துணரப்படுவதாகலின் அது கொண்டு திருக்குறளுரையை மணக்குடையாருரையென்றுதான்சொல்ல வேண்டும். தொல்காப்பியவுரையை இளம்பூரணருரையென்றே சொல்ல வேண்டும் என்ற வரையறையில்லையாயினும் அவ்வக்காலத்து வெளியிட்ட நூல்கள் அவ்வக்காலப்பெயர்களாற் குறிக்கப்படுத லியல்பாகலின் அம்முறையே அவ்வந்நூல்களின் தலைப்பிற் பெயர் பொறிக்கப்பட்டு வழங்கலாயினவெனக் கொள்ளவேண்டும். அங்ஙனம் பெயர்வேறுபட வழங்கியது கொண்டு அக்காலத்தார் இவ்வுரையாசிரியரை இருவரெனக்கொண்டு மயங்கினாரல்லர் என்பதே இப்பாயிர ஆராய்ச்சியாற் காணப்படும் உண்மையாகும். இருபெயரும் ஒருவரையே குறித்தவாயின் மணக்குடையரடிகள் எனக் குடிப்பெயரொடு இளம்பூரணர் பெயர் தொடுத்துக்கூறப்பெற வேண்டும் என உதவிப்பத்திராசிரியர் தடைகூறுவர். சுற்றத்தொடர்பு ஒழியத் துறவுநிலைமேற்கொண்ட இளம்பூரணஅடிகளார் மீண்டும் சுற்றத் தொடர்பொடுபடுத்து மணக்குடையாரடிகளெனப் பேசப்படுதல் துறவறமாண்புக்கு இயைவதன்றாகலின் அக்கூற்றுப் பொருந்தாதென்க. ஒருவருக்கு இருவேறுகாலங்களில் வழங்கிய மணக்குடையார் இளம்பூரணர் என்னும் பெயர்வேற்றுமைகருதி இருவராக மயங்கலாகாது எனத் தெளிவித்தற் பொருட்டே பாயிரத்தும் கொங்குவேண்மாக்கதைக் குறிப்புரைகண்டோன், குறட்பான் மதிப்பிடப் பொறித்தோன் என இறந்தகாலவினைப்பெயராற் கூறி அவற்றின்பின்னர்த் தொல்காப்பியவுரை எழுதப்பெற்றமை தோன்றத் 'தொல்காப்பியவுரை தந்தனன்' என வினைமுற்றாகக்கூறிய குறிப்பும் நோக்குதற் குரித்து.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியராகவிளங்கும் அருண் மிகு விபுலாநந்தஅடிகளால் இக்காலத்து வெளியிடப்பெறும் நூல்களன்றி முன்னர்ப் பண்டித மயில்வாகனனார் என்னும் பெயருடன் வெளியிட்ட கட்டுரைகள் முதலியன அவர்களியற்றியவையல்ல எனக் கோடல் பொருந்தாமைபோலப் பெயர்வேறுபாடுகருதி இருவரெனத் தடைகூறும் இக்கூற்றும் பொருந்துவதன்றாம். திருச்சிற்றம்பலக்கோவையருளிய ஆசிரியர் சான்றோர்செய்யுளிலே திருவாதவூர்ச் சிவபாத்தியன் என வேறு பெயராற் குறிக்கப்பெறுதல்கொண்டு அவர் மாணிக்கவாசகப்பெருமானின் வேறாவர் என்பார் உரையோடு இதுவும் சேர்த்துரைக்கப்படுதல் ஒருதலை.

ஆதியுரையாசிரியராகிய இளம்பூரணருரைப்பகுதியைப் பின்வந்த மணக்குடவர் முன்னோர்மொழிபொருளாகப் பொன்னேபோற்போற்றி யுரைத்தாரெனக் கொள்ளின் அஃது யாண்டேனும் ஒருசிலவிடத்து எடுத்துக் காட்டப்படும். அங்ஙனமன்றிப் பண்டாரத்தாரவர்கள் காட்டிய கட்டுரையிலே ஒன்பது இடங்களில் இருநூலுரைகளும் ஒத்துவரக் காண்கின்றோம். இன்னும் ஆராயின் எத்துணையோ ஒப்புமைகள் காணப்படும். அன்றியும், இப்பகுதிகள் ஒருவர் உரையைப் பலவிடத்தும் மற்றொருவர் வாங்கிக் கூறியனவாயின் ஒருவர்கூற்றை மற்றொருவர் கொண்டுகூறும் மரபின்படி 'என்ப' என்றாங்கு எடுத்துக்கோள்வினை எதன்பாலேனும் அமைந்திருத்தல் வேண்டும். அங்ஙனமன்றி இற்றைநாட் கட்டுரைக்கள்வர் சிலர்போல ஒருவர் தொடரை மற்றொருவர் கவர்ந்துகொண்டு பலவிடத்தும் தம்முரையாக வரைந்துள்ளார் என்னும் பழியைப் பண்டையுரையாசிரியர்க்குத்தருமாதலின் உதவிப்பத்திராசிரியர்கூறும் அமைதி ஆராய்ச்சிமுறைக்குச் சாலாதென்க.

எனவே, இப்பாயிரம் பிற்காலத்தாரியற்றிய போலிப்பாடலன்றெனவும் இவ்வாராய்ச்சிக்குரிய பாயிரவடிவம் சொர்ணம்பிள்ளையவர்கள்காட்டிய தன்றெனவும், அதற்கு வேறாகப் பலபாடபேதங்களோடு காணப்படும் இது திரு.பண்டாரத்தாரவர்கட்குரிய பழைய பொருளதிகார இளம்பூரணருரைக் கையெழுத்துப்பிரதியிலுள்ளபடி அவர்களால் எழுதி வெளியிடப்பட்டதெனவும், பாடபேதங்கள் காணப்படுவதுகொண்டு சொர்ணம்பிள்ளையவர்கள்பிரதியும் உண்மையுடையதெனத் துணியப்படுமெனவும், இதுகொண்டு உய்த்துணரப்படும் ஆராய்ச்சி ஆராய்தற்குரிய சிறப்புடையதே யெனவும், அவசரப்பட்டு மறுக்கத்தகுந்த எண்மையதன்றெனவும் உதவிப்பத்திராசிரியர்க்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வைத்தீசுவரன்கோயிலென்றுவழங்கும்
திருப்புள்ளிருக்குவேளூரிலுள்ள

# அச்சுதப்பநாயக்கர்கல்வெட்டு*

[திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.]

இருக்குமிடம்:— கிழக்குக் கோபுரத்தின் தென்பால் மேற்குப்பக்கம்.

மன்னன்:—தஞ்சையை ஆண்ட நாயக்கமன்னராகிய அச்சுதப்பநாயக்கர்.

காலம்:—சாலிவாகன சகாப்தம், அதற்கு நேரான கலியுகாதி இவைகள் சிதைந்துவிட்டன. ஆயினும், சுபானு ஆண்டு மாசிமீ 13உ என்பது மாத்திரம் காணப்பெறுகின்றது.

குறிப்பிடப்பெற்ற செய்தி:— மகாசிவராத்திரிபுண்ணியகாலத்திலே, நடராசப்பெருமானுக்குத் திருமுழுக்கு ஆட்டுவிப்பிப்பதற்காக மண்ணிப் பள்ளம் என்ற ஊரில் நிலம் விடப்பெற்றமை.

## சாசனம்.

வரி.

(1) ... ... ... ... ... ... ...

(2) மேற்சொல்லாநின்ற சுபானு௵ மாசி மீ ௰௩உ

(3) ஸ்ரீவிச்வேச்வரர் அபிஷேககட்டளை

(4) நாயக்கர் அச்சுதப்பநாயக்கர் அய்யனுக்கு பு

(5) ண்ணியமாக சிவராத்திரிபுண்ணியகாலத்திலே

(6) அழகப்பெருமாள்பிள்ளை சுவாமி சிதம்பரே

(7) ... ... பிஷேகத்துக்கு வெறுகரைச்சீர்மை திருவா

(8) ப்பற்று மண்ணிபள்ளம் நான்கெல்லை ரூ, ஸ-

(9) கலசமுதாயமும் சேர்த்தபடியாலே சந்திராதித்த

(10) வரையும் அனுபவித்துக்கொண்டு அபிஷேகம்

(11) நடத்திவரக்கடவராகவும்.

---

* இக்கல்வெட்டு, தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதிகளில் வெளிவந்திலது. அச்சுதப்பநாயக்கரைப்பற்றி ஆராய்வார்க்கு இக்கல்வெட்டுப் பயன்படும்.

# கம்பர் காலம்*

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர்

திருவாளர்: ராவ்ஸாஹிப் ஸ்ரீ. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.

தமிழ்நாட்டிலே கவிச்சக்கரவர்த்தி என்று ஒரு சில புலவர்க்குப் பெயர் வழங்கியதுண்டு. இவர்கள் தங்கள்காலத்து அரசர்களாற் பெருங்கவிஞரெனக் கொண்டாடப்பெற்று, அவர்களாற் சிறப்படைந்து வாழ்ந்தனர். ஆனால், பொதுமக்கள், இவர்களை ஒருவாறு பாராட்டியபோதிலும், கவிச்சக்கரவர்த்தி என்று சிறப்பித்தற்குரிய தகுதிவாய்ந்தவர்களென்று கருதியதில்லை. ஒரேயொருவரைத்தான் அவர்கள் இச்சிறப்பிற்குரியரென்று கொண்டுள்ளார்கள். அவர் கம்பர். தமிழொன்றே வல்ல அறிஞர்கள் மட்டுமன்றி, ஆங்கிலம் முதலிய பல மொழிகளைப் பயின்று காவியங்களை ஒப்புநோக்கவல்ல அறிஞர்களிற் பெரும்பாலாரும் கம்பர் பெருங்கவிஞர் என்பதை ஒத்துக்கொள்கின்றனர்; பிறநாட்டுப் பெருங்கவிஞர்களோடு ஒப்பிடற்குரியாரென்றும் கருதுகின்றனர். இத்தகைய பெருங்கவிஞர் வாழ்ந்த காலங்கூட இன்னும் ஐயமறத் துணியப்படாதது வியப்பல்லவா?

ஆராய்ந்து துணியவேண்டும் அவசியத்தை ஒரு செய்யுள் இடைநின்று மறைத்து அறிஞர்களை மயக்கிவிட்டது. அச்செய்யுள் இராமாயணப்பிரதிகளிற் காணும் ஒரு தனியனாகும். அது வருமாறு:

எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே.

---

* இது, 31—12—45-ல் சென்னை வானொலிநிலையத்திற் பேசியது; அந்நிலையத்தார் அநுமதிபெற்று வெளியிடப்பட்டது.

இதில் "சகாத்தம் எண்ணூற்றேழு" என வருதலால், கி. பி. 885-ல் கம்பர் தமது காவியத்தை இயற்றினரென்று வெளியாகிறது. 'இத்தனை தெளிவான சான்று இருக்கும்போது, காலம் பற்றிய ஆராய்ச்சி எதற்கு?' என வினவலாம்.

ஆனல், இம்முடிபு ஆராய்ச்சியால் நன்கு தெளியப்பட்ட சில காலவரையறைகளுக்குப் பொருத்தமின்றிச் சரித்திரமுடிபுகளையே புரட்டிவிடுகிறது. இதனல் இராமாநுஜர் இறுதியாகிய ஆசார்ய பரம்பரைக்கு முற்பட்டவர் கம்பர் என்று கொள்ளும்படியாகும். சுமார் 10-ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய சீவகசிந்தாமணிக்கு இவர் காலம் முற்பட்டதென முடியும். இந்நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த நம்மாழ்வாருக்குச் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இவர் இருந்தனர் என்றும் கொள்ளநேரிடும். சோழ அரசர்கள் பெருமையுற்றுவிளங்கியதற்கு முற்பட்ட காலத்தில் இவர் வாழ்ந்தனர் என்றும் துணிய நேரிடும். இவைகள் முற்றும் அசம்பாவிதமாம். வைஷ்ணவசமய சரிதத்திற்கும், தமிழிலக்கிய சரிதத்திற்கும், தமிழ்நாட்டுச் சரிதத்திற்கும் இச்செய்யுள் முரண்பாடாக உள்ளது.

இக்காரணங்களால் இத்தனியன் சான்றாகக் கொள்ளத்தக்கதன்று.

இனி, வேறுவகையான சான்றுகள் உண்டோ? என நோக்குவோம். கம்பரைக்குறித்து வரதராசர்பாகவதத்தில்,

> சம்பரனை வதைத்துயருந் தசரதராமன்சரிதை
> கம்பன்மொழி செந்தமிழின் கவித்திறத்தின் காட்சிகண்டும்
> அம்புயக்க ளலர்ந்தெழுநீ ரிலஞ்சிதனி லாம்பலும்ந
> தம்பியபோலே வாசுதேவகதை சொல்லினனல்.

என்று வருகின்றது. இந்நூலின்காலம் கி. பி. 1543-ஆகும். எனவே, 16-ம் நூற்றாண்டுக்குமுற்பட்டவர் கம்பர் என்பது தெளிவு.

அரசகேசரியாரது ரகுவமிசத்தின் பாயிரத்தில் 'கற்றார்கவியிற் பெரிதாந்தமிழ்க் கம்பநாடன்' எனக் கம்பர் குறிக்கப்படுகிறார். இவரதுகாலம் கி. பி. 1478-1519. எனவே, 15-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் கம்பர்.

அன்றியும், நன்னூலுக்கு மயிலைநாதர் இயற்றிய உரையிலும் (114-உரை) 'கம்பன்' என்பது உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. நன்னூல் 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. மயிலைநாதருரை சுமார் கி. பி. 1400-ல் இயற்றப்பட்டிருக்கலாம்; எனவே இக்காலத்திற்கு முற்பட்டவர் கம்பர்.

வீரசோழியவுரையிலே, 'கம்பனாரிடைப் பெருமை யுளது' (வேற்றுமை 6-உரை) என வருகின்றது. 'நம்பனாரிடை' என்று சிலர் பாடங்கொள்வாராயினும் பழைய ஏட்டுப்பிரதிகள் முன் பாடத்தையே ஆதரிக்கின்றன. இவ்வுரை, நூலின்காலமாகிய 11-ம் நூற்றாண்டுக்குப்பின் சுமார் 13-ம் நூற்றாண்டளவிற் பிறந்திருக்கலாம். ஆகவே, கி. பி. 1300-க்கு முன் கம்பர் வாழ்ந்தவராதல்வேண்டும்.

இம்முடிவு கி. பி. 1376-ம் ஆண்டிற் பொறிக்கப்பட்ட ஒரு கன்னடக் கல்வெட்டால் உறுதியாகிறது. தமிழ்லிபியில் அது வருமாறு:

"ஸகலகுணஸம்பந்நரான வத்ஸகோத்ரத்து ஆனுகபள்ளி கம்பராமாயண நாராயணருடைய மக்கள் ராமாயணம் ராமப்பனும் லக்ஷ்மணனும் அனுகவள்ளி ராமச்சந்திரதேவர்பாதங்களை நமஸ்காரஞ்செய்துபோனார்கள். பிங்கல ஸம்வத்ஸரத்தில் வரைந்தது."

இக்கல்வெட்டினால் கி. பி. 1376-க்குமுன்பு இரண்டுதலைமுறைக்காலமாக (சுமார் 50-ஆண்டுகளாக)க் கம்பராமாயணம் கன்னடதேசத்திலே பரக்க வழங்கிவந்ததென்பது விளங்கும். ஆகவே, கி. பி. 1325-க்கு முன்பாகவே கம்பராமாயணம் பாடப்பெற்றுப் பிரபலம் அடைந்திருக்கவேண்டும். இவ்வாறாதற்கு ஒரு நூற்றாண்டு சென்றிருக்கலாம். எனவே, கம்பரதுகாலத்திற்கு கி. பி. 1225 மேலெல்லையாதல்வேண்டும். இம்மேலெல்லையை வேறொரு செய்தியும் வலியுறுத்துகிறது.

பெரியதிருமொழியில் 'மஞ்சுலாஞ் சோலை'ப் பாசுரத்தின் வியாக்கியானத்திலே 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப' என்ற கம்பரது அடியை மேற்கோள்காட்டி, 'என்று ஆற்றுவரவுகளிலே

சொல்லுவர்களாய்த்துத் தமிழர்' என்றெழுதினர் பெரியவாச்சான் பிள்ளை. இவர் பிறந்தது கி. பி. 1228. இது நாம் கண்ட கெல்லை கொள்ளத்தக்கதென்பதற்குத் தக்கசான்றல்லவா ?

கம்பர் பரந்துபட்ட கல்வியறிவுள்ளவர். இது 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்ற பழமொழியால் விளங்கும். இவர் சிந்தாமணி, பெருங்கதை முதலிய பலநூல்களையும் நன்கு கற்றுத் தெளிந்தவர். சிந்தாமணியில் (1134),

'குட்டியைத் தின்னலாமோ கோட்புலி புறத்ததாக'

என வருகின்றது. இதனை,

'புலிதானே புறத்ததாக் குட்டிகோட் படாது'

எனக் கம்பர் (சூர்ப்பணகைப்-102) எடுத்தாண்டனர். இங்ஙனமே,

'பாந்து மீதரும்பிய பசலை வானத்து'

என்ற பெருங்கதை (1, 33, 50) அடியினை,

'பாந்து மீனரும்பிய பசலை வானகம்'

எனக் கம்பர் (தைலமாட்டு-6.) எடுத்தாண்டனர். இவற்றுள், பெருங்கதை 8-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், சிந்தாமணி 10-ம் நூற்றாண்டின் இறுதியிலும் இயற்றப்பட்டன. ஆகவே, 10-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டுக் கம்பர் தோன்றியவராதல் வேண்டும். இக்காலம் முன்னெல்லையாகக் கொள்ளற்குரியது.

கி. பி. 1000-க்குப் பின்னும் கி. பி. 1225-க்கு முன்னும் உள்ள இடைக்காலத்தில் கம்பர்காலம் யாது ?

தமிழ்நாவலர்சரிதையில் கர்ணபரம்பரைவரலாறுகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்நூல் சுமார் 300 ஆண்டுகட்கு முற்பட்டது. இதில் ஓரங்கல் பிரதாபருத்திரன் ஆஸ்தானத்திற்குக் கம்பர் சென்றதாகவும், அவனது வள்ளன்மையைப் புகழ்ந்து,

அவனிமுழு துண்டும் அயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா உனனுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக் குழாம்.

என்ற செய்யுளைப் பாடினதாகவும் ஒரு வரலாறு காணப்படுகிறது.

இங்கே குறித்தவன் முதலாம் பிரதாபருத்திரன். இவன் கல் வெட்டுக்கள் கி. பி. 1162, 1179 முதலிய ஆண்டுகளில் உள்ளன. எனவே, 12-ம் நூற்றாண்டில் இவன் வாழ்ந்தவன். ஆதலால், கம்பரும் இக்காலத்தவராவர்.

வேறொரு வரலாறு ஒட்டக்கூத்தரும் கம்பரும் ஒருகாலத்தினர் என்று கூறும். ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டம் பாடியவர் என்றும் இவ்வரலாறு கட்டுரைக்கும். விக்கிரமசோழன், குலோத்துங்கன் II. இராஜராஜன் என்ற மூன்று அரசர்கள்காலத்தும் கூத்தர் வாழ்ந்து இவர்கள்மீது உலாவும் பிள்ளைத்தமிழும் பாடியவர். இவ்வரசர்கள் கி. பி. 1118-முதல் 1178-வரை ஆண்டவர்கள். முன்குறித்த வரலாறு உண்மையென்றுகொள்ளினும், 12-ம் நூற்றாண்டே கம்பர்காலம் என்பது விளங்கும். ஆனால், உத்தரகாண்டம் இயற்றியவர் வாணியன்தாதன் என்று சோழமண்டலசதகம் கூறும். அன்றியும், தமிழ்நாவலர்சரிதையில் கூத்தரையும் கம்பரையும் இயைத்து எவ்வகைவரலாறும் காணப்படவில்லை. 75-ஆண்டுகட்குமுன் இயற்றிய விநோதரசமஞ்சரியிலேதான் இவ்வகை வரலாறுகள் முதன்முதல் தோன்றின. இக்காரணத்தால் இதனை ஆதாரமாகக்கொள்ளல் தக்கதன்று.

இதுபோன்றதே சோழமண்டலசதகத்திற் காணும் பிறிதொருவரலாறும். கம்பரது உயிர்நண்பராகிய சடையப்ப வள்ளல், பராசசிங்கன் என்ற இலங்கையரசன் வேண்ட, பல கப்பல்களில் நெல்லனுப்பினர் என்பது வரலாறு.

தேனுர் தொடையார் பராச சிங்கப் பெருமான் செந்தமிழ்க்குக்
கானுர் நெல்லின் மலைகோடி கண்டி நாடு கரைசேரக்
கூனுர் கப்ப லாயிரத்திற் கொடுபோ யளித்த கொடைத் தடக்கை
மானுகரன் சங்கரன் சடையன் வளஞ்சேர் சோழ மண்டலமே.

என்பது இச்சதகச்செய்யுள். சங்கரன் என்பவர் சடையப்ப வள்ளலின் தந்தை. 'சங்கரன்தரு சடையனென்றொரு தரும தேவதை வாழவே' என, வேறொரு அருமைச்செய்யுள் சடையப்பரைக் குறிக்கிறது. இப் பராசசிங்கனைக் குறித்துப் பலபல ஐயங்கள் உண்டு. இவனைச் சரித்திரம் ஒப்புக்கொள்ளும் அரசனாகக் கொள்ளமுடியாது. கண்டிநாட்டில் இப்பெயருடையவன்

ஆட்சிபுரிந்ததில்லை. யாழ்ப்பாணத்தில் அரசுபுரிந்தவனுகலா மென்று வலிந்துகொள்வர். இது இலங்கைச் சரித்திரத்தால் ஆதரிக்கப்படவில்லை. எனவே, இவ்வாலாற்றினுற் பெறப்படும் செய்தியைச் சரித்திரச்சான்ருகக் கொள்ளுதலும் முடியாது.

இதுவரை, புறச்சான்றுகளை நோக்கிவந்தோம். அகச் சான்றுகளாக உள்ளனவற்றை இனி நோக்குவோம். கம்பர் காவிரி நாட்டையும் அதனை ஆண்டுவந்த சோழஅரசனையும்பற்றி ஒரு சில இடங்களிற் கூறியுள்ளார். அரசனைப்பற்றியனவே இங்கே இயைபுடையன.

புவிபுகழ் சென்னிபோ ரமலன் றேள்புகழ்
கவிகள்தம் மனையெனக் கனக ராசியும்
சவியுடைத் தூசுமென் சாந்து மாலையும்
அவிரிழைக் குப்பையும் அளவிலாதது. (பிலநீங்கு - 36)

என்பது ஒரு செய்யுள். இங்கே 'அமலன்' என்றிருப்பது சில அரிய பிரதிகளில் 'அபயன்' எனக் காணப்படுகிறது என்பர். முதற் குலோத்துங்கனேயன்றி, இரண்டாங்குலோத்துங்கனும் அபயன் என்னும் பெயர்க்குரியான். இவன்காலம் கி. பி. 1142—1160. கம்பர் தம்காலத்தரசனையே குறித்திருத்தல் இயல்பாகலின், அவரும் இக்காலத்தே வாழ்ந்தவரென்றே கருதுதல் தகுதி. ஆனால், பாடநிச்சயமின்மையால் அறுதியாகக் கொள்ளுதற்கில்லை.

பிறிதொருசெய்யுளில்,

வன்னி நாட்டிய பொன்மௌலி வானவன் மலரின் மேலான்
தன்னிகா ளிருவைச் சேர்ந்த கண்ணனு மாளுங் காணிச்
சென்னிநாள் தெரியல் வீரன் தியாகமா விநோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப் போனான்.

என வருகிறது. இங்கே, 'தியாகமா விநோதன்' என்பது தியாக சமுத்திரம் என்று வழங்கிய விக்கிரமசோழனையே குறித்ததாகக் கொள்ளுதல்வேண்டும். சோழர் பேரரசர்களுள் இவன் ஒருவனே தியாகத்திற் சிறந்தவனென்று சிறப்புப்பெயர் பெற்றவன். 'தியாக சமுத்திரம்' என்ற சிறப்புப்பெயரை மனத்திற்கொண்டே 'வாரங்க ளின் வாரி' (விபீடணன் 140) என்ற அழகிய தொடரைக் கம்பர் இராமபிரானுக்கு வழங்கினரென்று கருதலாம். தியாகசமுத்திர மாகிய விக்கிரமசோழன் கி. பி. 1118-முதல் 1142-வரை அரசு

புரிந்தவன். இவன்காலத்தவரே கம்பரும் ஆவர். இது மேற் குறித்த செய்திகள் அனைத்திற்கும் பொருந்துவதோடு 'எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல்' என்ற செய்யுள் பிற்செருக லென்பதையும் தெளிவுறுத்துகிறது.

இக்காலம் வேறொருசெய்யுளால் ஐயத்திற் கிடனின்றி நிச்சயம் ஆகிறது. சில இராமாயண ஏடுகளில் விடைகொடுத்த படலத்தின்பின் சில அரியசெய்யுட்கள் வரையப்பட்டுள்ளன.

அவற்றுள்,

ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரார் குணதித்தன் சேயமையப் பாடினான்
காரார் காகுத்தன் கதை.

என்ற செய்யுளும் ஒன்றாகும் (செந்தமிழ் IV-53). சகாப்தத்தைச் சகரயாண்டு என்றல் அக்காலத்துள்ள ஒரு சாசனவழக்கு (S. I. I. XII. 263-264). இதனால், சகாப்தம் 1100-ல், அதாவது கி. பி. 1178-ல் இராமாயணத்தைக் கம்பர் பாடினரென்று விளங்குகிறது. இவ்வாண்டிலே கம்பர் தமது பெருங்காவியத்தை அரங்கேற்றினாரென்றுகொள்ளவேண்டும்.

தமிழ்நாட்டுச்சரிதத்திலே கம்பர்வாழ்ந்தகாலம்போல அத்துணை மேம்பாடானகாலம் வேறில்லை என்று சொல்லலாம். சேர சோழ பாண்டியர்கள் பன்னூறாண்டுகளாகக் கனவுகண்டுகொண்டிருந்த சக்ரவர்த்தித்துவம் 10-ம் நூற்றாண்டிலிருந்து சோழ அரசர்களால் நனவிற்கண்டதோருண்மையாயிற்று. தமிழ்நாடுகளை வென்று முற்றும் கைக்கொண்டு, கலிங்கம், கடாரம் முதலிய பல தேசங்களிலும் தமது ஆணை பரவும்படியாகச் செய்திருந்தனர். கடலுக்கு அப்பாலுள்ள சுமாத்திரா, ஜாவா முதலிய இடங்களிலும் சோழ அரசர்களுடைய புகழ் பரவி அந்நாட்டரசர்களோடு நெருங்கிய அரசியல்தொடர்பு ஏற்பட்டிருந்தது. 'புவிபுகழ் சென்னி போரமலன்' என்ற கம்பருடைய செய்யுள் சோழரது உச்சநிலையையே உணர்த்துகின்றது. நாட்டின் செல்வநிலையும் அரசியல் நிலையைப்போலவே மிகவும் மேம்பாடுற்றிருந்தது. பிறநாடுகளை வென்றுகொண்ட செல்வத்தோடு தமிழ்நாட்டில் ஆட்சிமுறையில்

புதுவழிகளை வகுத்து நாட்டின் செல்வத்தைச் சோழர்கள் மிகுவித்தனர். சமயநிலையும் சோழர்கள்காலத்து மிகவும் சிறந்து விளங்கியது. பக்திநெறியானது நாடெங்கும் பரவிச் செழித்திருந்தது. இப் பக்தியின்விளைவே கம்பரது ராமாயணம் என்று கூறலாம். 'படிகொண்ட கீர்த்தி யிராமாயணமென்னும் பத்தி வெள்ளம்—குடிகொண்ட கோயிலிராமாநுசன்' என்பது இராமாநுச நூற்றந்தாதி. இந்நெறியின் சின்னமாகப் பெருங்கோயில்கள் பல அங்கங்கே தோன்றின. ஆசாரியர்கள் வைஷ்ணவசம்யத்தைப் பெரிதும் பிரசாரஞ்செய்துவந்தனர். கம்பர்காலத்து ஆசாரியர் நஞ்சியர் என்று கருதலாம். தமிழ்நாட்டுமக்கள் தம்மிடையிருந்த பேதவுணர்ச்சியைப் போக்கி ஒருவாறு ஒற்றுமையெய்தும்படி, இப்பக்திநெறி ஊக்கியது. ஆதலால், சமுதாயநிலையிலும் புதுநோக்கமும் பரந்தவுணர்ச்சியும் புகுந்து அதற்குப் புத்துயிர் அளித்தன. நாட்டின் கல்விநிலைமையும் பெரிதும் போற்றற்குரியதாய் அமைந்தது. தமிழறிவில் வடமொழியுணர்ச்சியும் கலந்து தமிழ்மக்கள் மனப்பண்பு அழகுபெற்று விளங்கியது. தமிழ்மொழியும் புதிய பேரழகுடன் ஒளிர்ந்தது; எளிமையிலும் நேர்மையிலும் சங்ககாலத்துத் தமிழோடு ஒருவகையில் ஒப்பிடக் கூடியதாயிற்று. சொல்லழகில் ஈடுபட்டு அவ்வழகைக் கருவியாகக் கொண்டு தமிழ்மக்களை வசீகரிக்க முயன்றனர் சைனகவிஞர்கள் முதலியோர். சொல்லழகோடு கூடிய பொருளழகுதான் உண்மையில் இன்புறுத்தத்தக்கது என்ற கொள்கை கம்பர்காலத்திற் பரவியிருந்தது. பலவகையான செய்யுள்விகற்பங்களையெல்லாம் சிறுநூல்களுக்கு ஒதுக்கிவிட்டுப் பெருமிதமாய்த் தலைநிமிர்ந்துசெல்லும் விருத்தமே பெருங்காவியங்களுக்கு உரியதாகும் என்ற கொள்கையும் ஓங்கிச் சிறந்தது. 'விருத்தமென்னும் ஒண்பாவிலுயர்கம்பன்' என்ற அடியும் கம்பராமாயணமும் இதற்குரிய சான்றுகள். இங்ஙனமாக அரசியல்நிலை, செல்வநிலை, சமயநிலை, சமுதாயநிலை, கல்விநிலை முதலியன யாவும் ஒப்புயர்வற்றுச் சிறந்து விளங்கிய இக்காலத்தே கம்பர் தமது இராமாவதாரமாகிய கலைப் பெருங்கோயிலை இயற்றினர்.

---